# மறை ஞானப்பேழை

சத்தியம் வந்துவிட்டது !

அசத்தியம் அழிந்து விட்டது !

நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும் !

July 2024 ஜுலை 2024

Retail Selling Price 25

Page 1

Volume - 16, Issue - 5



# வெளிவந்துவிட்டது!

நாம் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

## அல் – இக்துத் தராரீ ஃபீ ஷரஹிஸ்

# ஸஹீஹி லில் இமாமில் புகாரீ

(முதல் பாகம்)




சங்கைமிகு குத்புல் ஃபரீத்,

**ஜமாலிய்யா அஸ்ஸையித்**

**யாஸீன் மௌலானா (ரலி)**

அவர்கள் அறபு மொழியில் ஆக்கியது.

**விலை ரூ. 1000/ – மட்டும் – (கொரியர் செலவு தனி.)**

**தொடர்புக்கு : 99437 86269 - 99445 76165**

## மறைஞானப் பேழை சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 300/- |
| வெளிநாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 3000 /- |

**சந்தாத் தொகை அனுப்ப, முகவரி மாற்றம், மற்ற விபரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய கை பேசி எண்கள்.**

**Cell : 9597912410 - 9944576165**

## விளம்பரக்கட்டணம்

| | ரூபாய் |
|---|---|
| முழுப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 1000 |
| முழுப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 10000 |
| அரைப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 600 |
| அரைப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 5000 |
| கால் பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 500 |
| கால் பக்கம் (ஆண்டு முழுவதும்) | 4000 |

# Be in all and get the power of God

## ஆன்மிக மாத இதழ்


**வெளியிடுவோர்**
**அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை**
பாகிரா காம்ப்ளக்ஸ்74, பழனிரோடு.
திண்டுக்கல் - 624 001.

**நிறுவனர்**
குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜுத், ஜமாலிய்யா
அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா
நாயகம் அவர்கள்.

**ஆசிரியர்**
கலீஃபா. S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**
கலீஃபா. A.N.M. லியாகத் அலி, B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**
J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**
R. விஜயலட்சுமி
ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,
52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**
ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165



செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி

**S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ**
**(கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்)**
13. எம்.ஆர்.ஆர். நகர்
திண்டுக்கல் - 624 002.
CELL : 99445 76165
Website:www.emsabai.org
email: aalimpulavar07@ gmail.com
email: j.mdrahmathulla@yahoo.com
https:www.emsmedia.net
https:www.awniyyabookstore.com
https:www.yaseenrali.com


# மறை ஞானப் பேழை


**துல்கஃதா-துல்ஹஜ்**

**ஜுலை 2024**
**Volume - 16 Issue -5**


## பேழைக்குள்......


*ஜமாலிய்யா தோட்டத்தில் கொய்த மலர்*
*திருமறைப் பக்கம்.*
*அமுத மொழிகள்.*
*உமர் (ரலி) புராணம் - நயம்.*
*அறபு இலக்கிய வளர்ச்சி*
*இளையநாயகம் அவர்கள் இந்திய விஜயம்*
*முஹர்ரம் 10 இன் முக்கிய சிறப்புகள்*
*நோயின்றி வாழ 6 வழிகள்*
*குரு தரிசனம்*
*சற்குரு சரித்திரம்!*
*அம்மாவின் தாலாட்டு*
*வக்பு சொத்துகள் - ஒரு பார்வை.*
*ஏ.மெ.ஞா. தமிழ்ச் சங்கம் - அதன் நிகழ்ச்சி*
*ஷைகு படே ஸாஹிப் ஹள்ரத் (ரஹ்)*
*கர்பலாவை நடத்திய யஜீது*
*மற்றும் தொடர்கள்....*

# நேசம் இல்லையேல் நாசம்!

அல்லாஹ் ஏன் பெருமானாரை நேசிக்கச் சொன்னான்?

அவனை நெருங்க விரும்புவோரை முதலில் அண்ணலை விரும்பு என்றதன் ரகசியம் என்ன?

தன்னுடைய தன்மைகளைப் பொதிந்து எதிரே உலா வருகின்ற தாஹா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விரும்பினால், தன்னிடமிருக்கும் அருளழகை கண்ணெதிரே ரசிக்கலாம் – சுவைக்கலாம் என்ற கருணையால்தான்.

மனக்கண்களால் மா இறைவனின் குணத்தை நினைப்பதை விட, மாநபியைக் கண்டு மாஇறை குணத்தை நேரில் அறியலாம்– அடையலாம் என்பதால் தான்.

தன்னை உள்ளடக்கி வைத்திருக்கின்ற – தான் ஒளிந்திருக்கின்ற –தங்க நபியை நேசிப்பதன் மூலம் அவர்களின் நேசமும் அவனுக்குக் கிடைக்க வேண்டும் என்ற தாராள அருளால் தான்.

முஃமினின் இதயம் மாநபியை நேசிப்பதன் மூலமே பூப்படைகிறது.

நாயகத்தை நேசிக்காத உள்ளம் வாசமில்லா காகிதப் பூவாகிப் போகிறது.

உடலுக்கு அத்தர் பூசுவது போல உள்ளத்துக்கு நபி நேசம் எனும் அத்தர் பூசிக் கொள்வதால்தான் இறை நேசர்கள் நடக்கும் வழியெல்லாம் வாசம் வழிகிறது.

அண்ணலாரை அருமை ஸஹாபாக்கள் நேசித்தார்கள். ஆனந்தம் அடைந்தார்கள்.

அண்ணலாருக்குப் பின் சமுதாயம் யாரை நேசிப்பது? அண்ணலாரிடம் அடைந்த பாக்கியம் அத்தோடு முடிந்து போவதா? ஸஹாபாக்களுக்கு அந்த பாக்கியம் கிடைத்தது. ஸஹாபாக்களின் சந்ததிகளுக்கு அது கிடைக்காதா? கிடைக்க வேண்டாமா?

நியாயமான சந்தேகம்தான். அதனால்தான் அஹ்லுபைத்துகள் எனும் அண்ணலாரின் குடும்பத்தாரை– அண்ணலாரின் பேரப்பிள்ளைகளை அருட்கொடையாக அல்லாஹ் கொடுத்து அவர்களை அடையாளமும் காட்டிவிட்டான்.

இமாம் ஹஸன் – ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுமா ஆகிய இருவரையும், அவர்களின் வழி வரும் வாரிசுகளையும் நேசிப்பது “ பர்ளு” என்று அல்லாமா மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் பாடுகின்றார்கள்.

கர்பலா மாதமாகிய முஹர்ரம் மாதத்தில் அவர்களை அதிகம் அதிகம் நினைப்போம் – மக்களுக்கு நினைவூட்டுவோம்.

**அவர்களை நேசித்தால் ஈமானில் வாசம் – இல்லையேல் நாசம்!**

*மறைஞானப் பேழை நிறுவனர்*

**அஷ்ஷைகுல் காமில்**
**குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்**
**ஜமாலிய்யா**
**அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா**

**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



ஷரீஅத், பைஅத் போன்றவற்றின் தாற்பரியங்களை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

பைஅத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். பைஅத் என்பது பைஅத் செய்யும்போது எடுத்துக் கொண்ட சத்தியப் பிரமாணங்களையும் சட்ட திட்டங்களையும் அப்படியே அண்டி நடப்பதும் பின்பற்றி நடப்பதுமாகும்.

அல்லாஹ் என்னும் சத்தியத்தை அறிந்து கொள்ள எடுத்துக் கொண்ட (பைஅத் என்னும்) சத்தியப் பிரமாணங்களுக்கு மாறாக ஒருவர் நடந்தால் பைஅத் கூடாது. பைஅத் முறிந்துவிடும்.

*– மனிதா – நூலில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –*

# ஜமாலிய்யா தோட்டத்தில்

■ ஹக்கு நம் அனைவரையும் ஹக்கில் ஒன்றாக்குமாக. ஹக்கு நமக்கு மேலும் மேலும் பலப்பல பதவிகளைத் தந்து கொண்டிருக்கிறது. அவற்றை நாமறியாப் புறத்திலிருந்தேயடைகின்றோம். நமது வாப்பா நாயகம் அவர்கள் நம்முடனே யிருக்கிறார்கள். நம்மை நேர் நடாத்தி வருகிறார்கள். அல்ஹம்து லில்லாஹ். நனவில் நம்முடனும் நாமாகவுமிருக்கிறார்கள். ஹக்கே ஹக்கு. எல்லாம் நாமே! எங்கும் நாமே! எங்கும் நிறைந்தது நாமே ! எங்கும் பரிபூரணமாய் நாமே! நாமல்லாத ஒன்றில்லை. லாஇலாஹ இல்லல்லாஹ்!

■ உருவம் எம்மை மறைத்துவிடுகிறது. அருவம் எம்மை வெளிப்படுத்துகிறது. அருவமே உருவமானோம். உருவமே அருவமானோம். உருவற்ற அருவே நான். ஹக்கே நான். அல்ஹம்துலில்லாஹ்! (கலீபா. எஸ்.அப்துல் கரீம் ஜமாலி அவர்களுக்கு (8.5.1967) எழுதிய பட்டோலையிலிருந்து...)

---

♦ நீங்கள் தௌஹீதை அறிந்து அதன்படி நடந்துகொள்ள ஆசைப்படும் செய்தியறிந்து மிகவும் சந்தோஷமானோம். அல்ஹம்துலில்லாஹ். இதுதான் மிக முக்கியம்.

இஸ்லாமிய மக்களில் அநேகம் பேர் சக்கையை மட்டுமே அறிகிறார்கள். சத்தை அறிந்தவர்கள் நூற்றுக்கு ஐந்துபேரே உள்ளார்கள். அநேகமான தரீக்காவை உடையவர்களும் இந்த நிலையிலே உள்ளார்கள். இதனால் தரீக்காவின் முக்கியத்துவமே கெட்டுவிடுகிறது. நீங்கள் ஹக்கை அறியும் விருப்பத்தில் இருக்கும் விஷயம் அறிந்து மிகவும் சந்தோஷமானோம். அல்ஹம்து லில்லாஹ்.

ஹக்கு உங்களுக்கு நிறைய அறிவைத் தந்து நீடிய நல்வாழ்வும் மேன்மையும் சிறப்பும் அருளுமாக. ஆமீன்.

லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்னும் கலிமாவைச் சொல்லிக் கொள்ளுங்கள். தொழுது வாருங்கள். காலைகளில் குர்ஆன் ஓதிவாருங்கள். நேரில் சந்திக்க நேரும் போது பைஅத் செய்வோம். அதுவரை உங்களுக்கு ஆத்மார்த்த ரீதியான பைஅத் செய்து உங்களை நம் முரீதுப் பிள்ளையாக ஏற்றுள்ளோம். அல்ஹம்து லில்லாஹ். அனைவருக்கும் நம் ஸலாம். ஹக்கு ரட்சித்துக் காக்குமாக. நல்வாழ்வு அருளுமாக. ஆமீன்.

*அதிரை ஷர்புத்தீன் ஹக்கிய்யுல் காதிரி அவர்களுக்கு 5.10.84 அன்று எழுதிய பட்டோலையிலிருந்து...*

*– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –*



## ஜொய்த மலர்

# தாஜுத் தர்ஜுமா

# மொழி பெயர்ப்புகளின் மகுடம்

**(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் மொழி பெயர்ப்பு.)**

وَإِذْ أَخَذْنَا مِيثَاقَ بَنِي إِسْرَاءِيلَ لَا تَعْبُدُونَ إِلَّا اللَّهَ وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا وَذِي الْقُرْبَىٰ

وَالْيَتَامَىٰ وَالْمَسَاكِينِ وَقُولُوا لِلنَّاسِ حُسْنًا وَأَقِيمُوا الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ

இஸ்ராஈலின் மக்களிடத்து, “நீங்கள் அல்லாஹ்வையேயன்றி (வேறு எதனையும்) வணங்காதீர்கள். தாய் தந்தையருக்கும் நெருங்கிய இனத்தவர்களுக்கும் அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும் உபகாரம் செய்யுங்கள். மனிதர்களுக்கு அழகியவற்றைக் கூறுங்கள். தொழுகையை நிலைநிறுத்துங்கள். ஏழைவரி கொடுங்கள் என்று” நாம் ஒப்பந்தம் செய்து கொண்டபோது,

ثُمَّ تَوَلَّيْتُمْ إِلَّا قَلِيلًا مِّنكُمْ وَأَنتُم مُّعْرِضُونَ ٨٣

பின்னர் உங்களினின்றும் சிலரைத் தவிர (மற்றவர்கள் அனைவரும் இவ்வொப்பந்தத்தினின்று) பின்வாங்கிவிட்டீர்கள். மேலும் நீங்கள் மறுத்தே வந்துள்ளீர்கள்.

وَإِذْ أَخَذْنَا مِيثَاقَكُمْ لَا تَسْفِكُونَ دِمَاءَكُمْ وَلَا تُخْرِجُونَ
أَنفُسَكُم مِّن دِيَارِكُمْ ثُمَّ أَقْرَرْتُمْ وَأَنتُمْ تَشْهَدُونَ ٨٤

நீங்கள் (ஒருவர் ஒருவருடன் சண்டைகள் செய்து) உங்கள் இரத்தங்களை ஓட்டிக் கொள்ளாதீர்கள். உங்கள் வீடுகளிலிருந்து (அல்லது உங்கள் நாடுகளிலிருந்து அல்லது பிறந்த ஊர்களிலிருந்து) உங்கள் தங்களையே வெளியேற்றிக் கொள்ளாதீர்கள் என்று நாம் உங்கள் ஒப்பந்தத்தை எடுத்துக் கொண்டபோது; பின்னர், நீங்களும் அதை உறுதிப்படுத்தி மேலும் நீங்களுமே சாட்சியும் புரிந்தீர்கள்.

5 ثُمَّ أَنتُمْ هَٰؤُلَاءِ تَقْتُلُونَ أَنفُسَكُمْ وَتُخْرِجُونَ فَرِيقًا مِّنكُم مِّن دِيَارِهِمْ
تَظَاهَرُونَ عَلَيْهِم بِالْإِثْمِ وَالْعُدْوَانِ

(அவ்வாறு ஒப்பந்தம் செய்யப்பட்ட) பின்னரும் நீங்கள் தாமோ வெனில் உங்கள் தம்மையே கொலை செய்து கொள்கிறீர்கள். உங்களினின்றுமுள்ள ஒரு பெருங்கூட்டத்தை அவர்களுடைய வீடுகளிலிருந்து (அல்லது அவர்களின் நாடுகளிலிருந்து அல்லது அவர்களின் பிறந்த ஊர்களிலிருந்து) வெளியேற்றி விடுகிறீர்கள். பாபத்தைக் கொண்டும் பகை (அல்லது தெளிவான அநீதியைக் கொண்டும் அவர்களுக்கு எதிராக நீங்கள் உதவி செய்வது போல்) பாசாங்கு செய்துகொள்கிறீர்கள்.(வெளிப்படுத்திக்காட்டிக்கொள்கிறீர்கள்.)

*வேறு சில மொழி பெயர்ப்புகளிற் கீழ்வருமாறு உள்ளது காண்க.*

*1. அவர்கள் மீது அக்கிரமம் புரியவும் பகைமை கொள்ளவும் (அவர்களின் விரோதிகளுக்கு) உதவி செய்கிறீர்கள்.*

*2. அவர்களுக்கு இடர் செய்ய பாவமும் அக்கிரமுமான விஷயத்தில் (அவர்கள் பகைவர்களுக்கு) நீங்கள் உதவியுஞ் செய்கிறீர்கள்.*

*3. அவர்களுக்குப் பாதகமாகக் குற்றம் புரிவது கொண்டும், பகைமையைக் கொண்டும் (அவர்களுடைய எதிரிகளுக்கு) நீங்கள் உதவி செய்கிறீர்கள்.*

*4. பாபத்தைக் கொண்டும் பகைமையைக் கொண்டும் அவர்களுக்குப் பாதகமாக (எதிரிகளுக்கு) உதவி செய்கிறீர்கள்.*

**Driveout a party of your people from their homes supporting one another against them by sin and transgression - The Glorious Quran** - Mamaduk Pickhal.

وَإِنْ يَأْتُوكُمْ أُسٰرٰى تُفٰدُوهُمْ وَهُوَ مُحَرَّمٌ عَلَيْكُمْ إِخْرَاجُهُمْ

அவர்களை நீங்கள் (அவர்களுடைய இல்லம் அல்லது ஊர் அல்லது நாடுகளிலிருந்து) வெளியேற்றுவதே தடைவிதிக்கப்பட்டிருக்க அவர்கள் கைதிகளாக உங்களிடத்து வந்தால் நீங்கள் அவர்களுக்கு மீட்டுப் பொருள் கொடுத்து மீட்டுகிறீர்கள்.

أَفَتُؤْمِنُونَ بِبَعْضِ الْكِتٰبِ وَتَكْفُرُونَ بِبَعْضٍ

நீங்கள் வேதத்திற் சிலவற்றை நம்பி சிலவற்றை மறுக்கிறீர்கள்.

فَمَا جَزَاءُ مَنْ يَفْعَلُ ذٰلِكَ مِنْكُمْ إِلَّا خِزْيٌ فِي الْحَيٰوةِ الدُّنْيَا

உங்களில் எவர் அவ்வாறு செய்வாரோ அவருக்கு உலக வாழ்விலே இழிவைத் தவிர (வேறு கூலி) எதுவுமில்லை.

وَيَوْمَ الْقِيٰمَةِ يُرَدُّوْنَ اِلٰٓى اَشَدِّ الْعَذَابِ ؕ

மேலும் மறுமை நாளிலே அவர்கள் கொடிய வேதனையின் பால் மீட்டப்படுவார்கள்.

وَمَا اللّٰهُ بِغَافِلٍ عَمَّا تَعْمَلُوْنَ ۝ ٨٥

அல்லாஹ் நீங்கள் செய்பவற்றைப் பற்றி கவனவீனனல்லன்.

اُولٰٓئِكَ الَّذِيْنَ اشْتَرَوُا الْحَيٰوةَ الدُّنْيَا بِالْاٰخِرَةِ ؗ

அவர்களோவெனில் மறுவுலக சீவியத்திற்குப் பதிலாக இவ்வுலக சீவியத்தை வாங்கிக் கொண்டார்கள்.

فَلَا يُخَفَّفُ عَنْهُمُ الْعَذَابُ وَلَا هُمْ يُنْصَرُوْنَ ۝ ٨٦ ع 10

அவர்களை விட்டும் வேதனை இலகுவாக்கப்படாது. மேலும் அவர்களுக்கு உதவியும் கொடுபடாது.

---

**(ஆ.கா. அப்துல் ஹமீது பாக்கவி அவர்களின் மொழி பெயர்ப்பு)**

83. மேலும் (நினைத்துப் பாருங்கள்) இஸ்ராயீலின் சந்ததிகளிடம் நீங்கள் அல்லாஹ்வைத்தவிர (வேறொன்றையும்) வணங்காதீர்கள். தாய் தந்தைக்கும் உறவினர்களுக்கும் அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும் நன்மை செய்யுங்கள். அனைத்து மனிதர்களிடமும் அழகாகப் பேசுங்கள், (நல்ல பேச்சுக்களைப் பேசுங்கள்) தொழுகையை நிலை நிறுத்துங்கள், ஜகாத்தும் கொடுத்து வாருங்கள்; என்று நாம் வாக்குறுதி வாங்கிய பொழுது உங்களில் சிலரைத்தவிர மற்ற அனைவரும் புறக்கணித்து (மாறிவிட்டீர்கள்). (எப்பொழுதும் இவ்வாறே) நீங்கள் புறக்கணித்தே வந்திருக்கிறீர்கள்.

84. மேலும் உங்கள் (சகோதரர்களுடைய) இரத்தங்களை ஓட்டாதீர்கள் என்றும், உங்கள் இல்லங்களை விட்டு உங்க(ள் சகோதரர)களை வெளியேற்றாதீர் கள் என்றும் உங்(கள் மூதாதையர்)களிடம் நாம் உறுதி மொழி வாங்கியதை நீங்களும் (மனம் விரும்பி சம்மதித்து) அதை உறுதிப்படுத்தி இருக்கின்றீர்கள் என்பதை நினைத்துப் பாருங்கள்.

இவ்வாறு உறுதிப்படுத்திய பின்னரும் நீங்கள் உங்கள் மனிதர்) களைக் கொலை செய்து விடுகிறீர்கள். உங்களில் பலரை அவர்களின் இல்லங்களில் இருந்தும் வெளியேற்றி விடுகிறீர்கள். அவர்களுக்கு எதிராக பாவமாகவும் அநியாயமாகவும் (அவர்களுடைய எதிரிகளுக்கு) நீங்கள் உதவியும் செய்கிறீர்கள். (ஆனால், நீங்கள் வெளியேற்றிய) அவர்கள் (எதிரிகளின் கையில் சிக்கிக்) கைதிகளாக உங்களிடம் (உதவி தேடி) வந்துவிட்டாலோ அவர்களுக்காக நீங்கள் (பொருளை) ஈடு கொடுத்து (அவர்களை மீட்டு) விடுகிறீர்கள். ஆனால் அவர்களை அவர்கள் இல்லங்களிலிருந்து வெளியேற்றுவதும் உங்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ளது. (இவ்வாறு செய்யும்) நீங்கள் வேதத்தில் (உள்ள) சில கட்டளைகளை நம்பிக்கை கொண்டு சில கட்டளைகளை நிராகரிக்கிறீர்களா? உங்களில் எவர்கள் இவ்வாறு செய்கிறார்களோ அவர்களுக்கு இவ்வுலகத்தில் இழிவைத்தவிர (வேறொன்றும்) கிடைக்காது. மறுமையிலோ (அவர்கள்) கடுமையான வேதனையின் பக்கம் விரட்டப்படுவார்கள். உங்கள் இச்செயலைப் பற்றி அல்லாஹ் பராமுகமாயில்லை.

86. இவர்கள்தான் (மறுமை வாழ்க்கை)க்குப் பதிலாக இவ்வுலக வாழ்க்கையை விலை கொடுத்து வாங்கிக் கொண்டவர்கள். ஆதலால், அவர்களுக்குக் (கொடுக்கப்படும்) வேதனை ஒரு சிறிதும் இலேசாக்கப்படமாட்டாது. அவர்கள் (ஒரு) உதவி(யும்) செய்யப்பட மாட்டார்கள்.

---

## வாசக அன்பர்களே! மறைஞானப் பேழை சந்தா புதுப்பித்துவிட்டீர்களா?

**மறைஞானப் பேழை சந்தா அனுப்பவேண்டிய வங்கிக் கணக்கு எண்:**

**HUSSAIN MUHAMMAD.S. & JAHIR HUSSAIN.A**

**Indian Overseas Bank, SB A/c No. 20980100025255.**

**IFSC Code.IOBA 0002098**

**Branch- RM COLONY. DINDIGUL**

***பெயர் – முகவரி*** பணம் அனுப்பியவுடன் தயவுசெய்து இந்த எண்களில் ஒன்றைத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துங்கள்.

**A. JAHIR HUSSAIN. 9597912410 - 9944576165**

## திருக்குறள்

**மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
**வளிமுதலா எண்ணிய மூன்று. (941)**

ஒருவனுடைய உணவும் செயல்களும் அளவுக்குமேல் கூடினாலும் குறைந்தாலும், மருத்துவ நூலோர் வாதம் முதலாக எண்ணி வகுத்த மூன்றும் நோயைச் செய்யும்.

பறக்கும் 10

**மானங் குலங் கல்வி வண்மை அறிவுடைமை**
**தானந் தவம் முயற்சி தாளாண்மை தேனின்**
**கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்**
**பசிவந்திடப் பறந்துபோம். (ஔவையார்)**

## இரு மாதச் சிறப்பு தினங்கள்

**பிறை**

**துல்கஃதா**

ذو القعدة

7. திருமுல்லைவாசல் யாஸீன் மௌலானா (ரலி) கந்தூரி.
23 ஏர்வாடி சையிது இப்றாஹீம் ஷஹீது (ரலி) கந்தூரி

---

2 நாகூர் யூஸுஃப் தாதா (ரஹ்) கந்தூரி
4 பொதக்குடி ஸர்தார் அப்துல் கறீம் ஹள்ரத் (ரஹ்) மறைவு
9 அரஃபா தினம் (ஹஜ்ஜுடைய நாள்)
10 புனித ஈதுல் அள்ஹா
18 உதுமான் (ரலி) ஷஹீது
25 சென்னை மோத்தீ பாபா (ரஹ்) உரூஸ்

ذو الحجة

**துல்ஹஜ்**

## நன்றிகள் உரித்தாகுக!

மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி வளர்ச்சிக்காக முந்தைய ஆண்டுகள் போல் இந்த ஆண்டும் குர்பானி பங்குகள் சேர்த்த ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை நிர்வாகிகள், முரீதுகள், குர்பானி பணியில் ஈடுபட்ட, மதுரஸா உஸ்தாதுகள், மாணவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் சங்கைமிகு வாப்பா நாயகம் அவர்கள் பொருட்டால் நலவாழ்வும் – வள வாழ்வும் அருள்வானாக!

–நிர்வாகம்–

சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்

# அமுத மொழிகள்



■ மனிதன் பிறந்ததன் நோக்கம், தன்னைப் பற்றி அறிவதற்காகத்தான். இதைத்தான் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களும் சொன்னார்கள். அவர்கள் எதைச் சொன்னார்களோ அப்படியே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

எனவே, மனிதன் தன்னை அறிந்தால்தான் தன்னைப் படைத்துக் காத்துப் பின்னர் தன்னிடமே திரும்ப அழைத்துக் கொள்ளும் அல்லாஹ்வை அறிய முடியும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் இவ்வுலகத்தில் மனிதனை அனுப்பி இவ்வுலகைப் பார்! உன் ஆத்மாவைச் சுத்தப்படுத்து! என அறிவுறுத்தி திரும்பவும் தன்னிடமே சேர்த்துக் கொள்கிறான்.

இதனை விளங்காமல் சிலர் உண்ணுவதும், உறங்குவதும் தமது நோக்கம் என வைத்துக் கொண்டு உலகத்திலே உழல்கிறார்கள். நஷ்டப்படுகிறார்கள். அதனால்தான் தவ்ஹீதின் (ஏகத்துவக்) கல்வியைக் கற்காதவன் மிருகத்தைவிடக் கீழானவன் எனச் சொல்ல நேரிடுகிறது.

மிருகங்களும் சும்மாவிருக்கின்றன. சாப்பிடுகின்ற மனிதனும் தொழில் செய்தாலும் சாப்பிடுகிற எண்ணத்திலேயே வாழ்கின்றான். தொழில் செய்வது மிக முக்கியம். மனைவி, மக்களைக் காப்பது மிக முக்கியம்.

ஆனால், தொழில் செய்வதோடு நின்றுவிடாமல், ஞானத்தையும் விளங்கிக் கொள்ள வேண்டும். முக்கியமான அறிவாகிய தவ்ஹீதை ஒவ்வொருவரும் (விளங்கி) கற்றுக் கொள்ள வேண்டும்.

இதுதான் மிகமிக முக்கியமான விஷயமாக நீங்கள் கருதிக் கொள்ள வேண்டும். அவ்வாறில்லாமல் மிருகங்களைப்போல் வாழுவதைவிட வாழாமல் இருப்பதே மிக நல்லது.

உண்மையான சக்தி என்னவென்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

"Science" (விஞ்ஞானம்) படிக்கின்றார்கள். அதில் எல்லாம் போதிக்கப்படுகின்றது. மரம் என்றால் என்ன? அதில் பச்சை எப்படி வருகின்றது? சூரிய வெப்பம் தேவைப்படுகிறதா? மண் தேவைப்படுகிறதா? காற்று தேவைப்படுகிறதா? நீர் தேவைப்படுகிறதா? என்றெல்லாம் படிக்கின்றோம்.

அவற்றை அணுஅணுவாக ஆராய்ச்சி செய்கின்றோம். அதில் சிலர் சந்தோஷமடைகின்றனர். அதைப்போல அல்லாஹுˇத் தஆலாவையும் பூரணமாக அறிந்தால் எவ்வளவு பெரிய சந்தோஷம் உண்டாகும்? என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே, அல்லாஹ்வை தனித்தனியாகப் பிரித்து அறிவதைவிட முழுமையாக அறிவதுதான் முக்கியம்.

அல்லாஹுˇத்தஆலா, இவ்வுலகில் வாழும்போது பரிபூரணமான விளக்கத்தைத் தந்து, எங்களைச் சிறப்பித்து வைக்க வேண்டும். மேலும், அல்லாஹுˇத்தஆலா ஜோதி என்னும் நூரை எம் உடல் முழுவதும் பிரகாசிக்கச் செய்ய வேண்டும்.

நம்முடைய கண்பார்வை, கேள்வி, மூச்சு, பேசுவது, உண்பது யாவுமே ஹக்குடைய நாட்டமாகப் பதிய வேண்டும். எல்லாக் கருத்திலும் அனைவரும் ஒற்றுமையாக இருந்து தவ்ஹீதுடைய அறிவிலே சிறப்பெய்த வேண்டும்.

■ "தவ்ஹீது" என்பது ஒன்று எனும் கருத்தாகும். அதாவது, எல்லாம் ஒன்று என்பது பொருள். இவ்வாறு "எல்லாமே ஒன்று" என தவ்ஹீது பேசக் கூடியவர்களிடத்தில் "ஒற்றுமை இல்லை".

பிறருடைய குற்றங் குறைகளைச் சொல்வது, பிறரைக் கேவலமாக நினைப்பது. பொறாமை கொள்வது போன்ற மோசமான நிலைகளை நாம் காண முடிகிறது. ஒவ்வொரு இஸ்லாமியனும் சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும் என்பதே நியதி. ஆனால், சகோதரத்துவம் எனும் கருத்து இங்கில்லை. யாரும்

சகோதர மனப்பாங்கோடு வாழ்வதில்லை. பொறாமை மிகைத்து நிற்கிறது.

இஸ்லாமிய சமுதாயத்தில், ஒரு சிறிய கூட்டத்தில்கூட ஒற்றுமையில்லாமல் இருப்பதை நாம் காண முடிகிறது.

தவ்ஹீதையுடையவர்கள் வெறுப்பைக் காட்டுவது தவ்ஹீதுடைய கொள்கைக்கு முரணானது. தவ்ஹீதையுடையவர்கள் மற்ற முஸ்லிம்களோடும் அன்பாக இருக்க வேண்டும். பிறருடைய கவலைகளைப் போக்கவேண்டும். தகப்பன் – பிள்ளைகளுக்கிடையே உள்ள குரோதங்களை ஒழிக்க வேண்டும்.

சொந்த பந்தங்களில் உள்ளவர்களின் குற்றங்களை நிவர்த்தி செய்ய வேண்டும்.

நமது உடலுக்கு “ஆவி’’ (உயிர்) எவ்வாறு உதவியாக இருக்கின்றதோ, அதைப்போலவே ஒவ்வொரு (முரீத்) பிள்ளைக்கும் மற்றவர் உதவியாளராக இருக்க வேண்டும்.

இருப்பவர்கள், இல்லாதவருக்கு உதவுங்கள். வழக்குரைஞர்கள் (Advocate) ஆக இருப்பவர்கள் தம்மாலான சட்டப்பூர்வ உதவிகளைமுரீத்) பிள்ளைகளுக்குச் செய்யுங்கள். எல்லாம் ஒன்று என உறுதியாக நம்புபவர்கள் இப்படித்தான் செய்து கொள்வார்கள்.

தவ்ஹீதுடையவர்களின் மற்றொரு அடையாளம் (அம்சம்) அளவான பேச்சாகும். நம்மிடம் பேசக்கூடியவர்களிடம் சந்தோஷமாகப் பேச வேண்டும். நட்பை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

இவ்வாறெல்லாம் நடந்து கொள்ளாமல், அல்லாஹ்வைப் பற்றியும், தவ்ஹீதைப் பற்றியும் யார் எப்படி விளங்கிக் கொள்ள முடியும்?

நம் முரீத்கள் மற்ற முஸ்லிம்களைவிட உத்தமர்களாக இருக்க வேண்டும். மற்றவர்கள் குறை பேச முடியாத அளவு எதிலும் முதன்மையானவர்களாகத் திகழ வேண்டும்.

■ சூபிஸம் என்பது தொழ மட்டும் உருவாக்கப்பட்டதென சிலர் தவறாக நினைத்துக் கொள்கிறார்கள். அவ்வாறல்ல, தப்பான எண்ணங்களை தாம் முதலில் நீக்கி, பிறரிடம் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். அதுவே தான் உண்மையான சூபிஸம்.

# உமர் ரலி புராணம்

*(நேரிசை வெண்பா)*

**சொல்ல வறியாத் துறுகற் சிலைசெதுக்கி**
**வல்லவ னாத்துதித்தல் மாடமே - நல்லதோ**
**முற்று முதலோற்கு முன்கல்லை யொப்பாக்கல்**
**கற்றவர்க்கே என்றுங் கறை.**

**பொருள் :** சொல்லவறியாத கல்லிற் சிலை செதுக்கி (அதனை) வல்லவனாகத் துதித்தல் மடமையே. (இவ்வாறு செய்தல்) நல்லதோ. முற்றும் நிறைந்து முழுமையாய் நிற்கும் முதலோனாகிய இறைவனுக்கு முன்னே கல்லை ஒப்பாக்குதல் கற்றவர்களுக்கு என்றும் குறை(யை உண்டாக்கும்.)

**விளக்கம்:** சிலைகள் வாய்பேசமுடியாதன. பக்தன் அழைத்துக் கேட்கும் கேள்விக்கு எந்த மறு மொழியும் கூற முடியாதன.

ஹள்ரத் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சிறிய சிலைகளைக் கோடரியால் உடைத்து பெரிய சிலையின் தோள்மீது கோடரியை மாட்டிவிட்டார்கள், இந்தச் சிலைகளையெல்லாம் உடைத்தது யார் ? என விசாரித்த போது, நாமெல்லாம் திருவிழாவுக்கு பக்கத்து ஊர் சென்றபோது, இப்ராஹீம் என்ற இளைஞர் மட்டும் தான் ஊரில் இருந்தார், அவர் சிலைவணக்கத்தைப்பற்றி அவதூறாகவும் பேசி வந்தவர். அவர்தான் உடைத்திருக்கவேண்டும், எனவே அவரை அழைத்து விசாரிப்போம் என அழைத்து விசாரணை செய்தபோது, அதோ அந்தப் பெரிய சிலைதான் உடைத்திருக்கும்... வேண்டுமானால் அதனிடம் கேட்கலாமே.... என்றவுடன், கற்சிலை எப்படிப் பேசும்? என அவர்கள் கூறி, ஒருகணம் திகைத்துத் தமக்குத்தாமே உண்மையை உணர முற்பட்டார்கள், எனினும் ஷைத்தான் அம்மக்களை உணரவிடாமல் வழி தவறச் செய்தான். இதனை அல்லாஹ் தனது திருக்குர்ஆனிலும் பதிவு செய்துள்ளான்.

**சொல்ல அறியாத கற்சிலையை வல்லவனாக மதித்து வணங்குவது நல்லறிவாளர்களுக்கு இழுக்கு என்பதை அழகாக விளக்குகிறது இப்பாடல்.**

*(சங்கைமிகு குத்புல் ஃபரீத், ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி) அவர்களின் வானொலிப் பிரசங்கமான "அறபு இலக்கிய வளர்ச்சி" எனும் நூல் தேடற்கரிய செய்திகளைக் கொண்ட தகவல் களஞ்சியமாக இருப்பதால் அதன் முக்கியப் பகுதிகளைத் தொடராக வெளியிடுதில் மகிழ்ச்சியடைகிறோம். வாசகர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக.)*

# அறபு இலக்கிய வளர்ச்சி

1. உள்ளது கொண்டு அவருடன் சீவியத்தில் கூட்டாகு.

2. அழகிய முறையில் அவர் சொற் கேட்டு அவருக்கு வழிப்பட்டு அவருடன் உறவாடு.

3. அவர் கண்கள் எங்குச் செல்லுகின்றன என்பதைக் கவனி. அது உனக்கு இழிவான இடத்தில் போய்ச் சேரக் கூடாது.

4. அவரின் ஆகார வேளையில் சமமாக நடந்து கொள்.

5. அவர் உறங்கும் வேளையில் அமைதியாக விரு, ஏனெனில் பசியின் உஷ்ணம் எரிகிற சுவாலை மிக்கது. உறக்கத்தைக் கலைக்கிறது; கோபத்தை உண்டுபண்ணுகிறது.

6. அவர் கவலையோடிருக்கும் போது நீ சந்தோஷம் கொள்ளாதே.

7. அவர் சந்தோஷமாக இருக்கும்போது நீ துக்கத்தைக் கிளப்பாதே. முந்தியது குற்றமும் பிந்தியது கலைக்கிறதுமாகும்.

8. அவரைக் கௌரவிப்பதில் மனிதரில் நீ மிகவும் கூடுதலானவளாக இரு. அப்படியானால் அவர் உனக்குச் சங்கை செய்கிறதில் மனிதரில் கூடுதலானவராக விருப்பார்.

9. அறிந்து கொள், அவரின் பிரியத்தை உனது பிரியத்தைப் பார்க்கிலும் அவர் தேவைகளை உனது தேவையைப் பார்க்கிலும் நீ தெரிந்து கொள்ளாதவரை நீ விரும்புகிறதை அவரிடமிருந்து பெற்றுக் கொள்ள மாட்டாய். அல்லாஹ் உனக்கு நலன் அருள்வானாக.

# 4 ஆம் பிரசங்கம்

## ஆரம்ப இஸ்லாமிய காலமும் உமவிய்ய ஏகாதிபத்தியமும் (இஸ்லாமிய இலக்கியம்)

கி.பி ஆறாம் நூற்றாண்டிற்குப் பின் அரேபியா ஒரு எரிமலை போல் தேன்றிற்று. தெற்கே யெமனை பர்ஷியா ஆக்கிரமித்திருந்தது. வடக்கே உரோமர் அரேபியரை அச்சமுறுத்திக் கெண்டிருந்தனர். எங்கும் கலகமும் கொள்ளையும் அராஜகமும் தாண்டவமாடிக் கொண்டிருந்தன. யூதர்கள் மதீனாவிலும் யமனியிலும் வட்டி சாப்பிடலையும் தௌராத்தையும் பரத்திக் கொண்டிருந்தனர். நெஸ்தூரிய ஜாகோபிய கிறிஸ்தவர்கள் இன்ஜீலைப் பிரசாரம் செய்து கொண்டும் கிரேக்க, உரோம தத்துவம், சட்டம் இவற்றைப் பிரசாரம் செய்து கொண்டுமிருந்தனர்.

வேறு புறத்தால் சந்தைக்குச் சந்தை, கிராமத்திற்குக் கிராமம் வீர கீதங்களைப் பாடி அரபிகள் மத்தியில் விரோதம், விதர்ப்பம் ஆகிய நெருப்புகளைக் கொளுத்திக் கொண்டும், மற்றொரு புறம் அவர்களே ஓர்மை, பழக்கம், மொழி, எழுச்சி இவற்றைப் பிரசாரம் செய்து கொண்டுமிருந்தனர்.

இபுனு கல்தூன் கூறியது போல் அன்றைய அறபிகள் தடித்த மனப்போக்கு, அகந்தை, தலைமைத்தனத்தில் போட்டி, இவைகளால் சிலர் சிலருக்கு வழிபடுகிறது மிக அபூர்வமாக விருந்ததால் அரசாங்கம் அவர்களில் நிலை பட முடியா திருந்தது. நபித்துவம், ஆத்ம சித்தி அல்லது ஒரு நல்ல பரிசுத்த மார்க்கமே அவர்களை நேர் நடத்தத் தேவையாயிருந்தது.

எனவே அரபிகள் ஒரு வேதத்தையும் சர்வ சம்பூரண தீர்க்கதரிசி ஒருவரையும் எதிர்பார்த்திருந்தனர் என்றே கூற வேண்டும். அந்நேரம் மனிதரை இரட்சிக்க வல்ல இறைவன் இச்சாதனங்களை அருள வேண்டியு மிருந்தான். (الحمد للّٰه)

*மனித இரட்சகரை, அவ்வரபிகள் மத்தியில் திருமக்கா நகரிலே அல்லாஹுவின் பூர்வீக ஆலயத்துக்கருகில் அல்லாஹ் தோன்றவைத்தான்.*

*அவரிலே, மனிதனின் எல்லாவித வாழ்க்கை நடைகளிலும் மனித வாழ்க்கையை உயர்வு பெறச் செய்யும் உத்தம வேதமான பரிசுத்த குர்ஆனை, இறக்கிவைத்தான். அவரே அதன் இலட்சிய உருவமாயும் இலட்சண புருடராயுமிருந்தார். இந்த அருள் ஜோதியின் பக்கம் மனிதர் விரைந்தனர். "லாயிலாஹ இல்லள்ளாஹ் முஹம்மதுர் ரஸுலுல்லாஹ்" அல்லாஹ் இன்றி வேறு கடவுள் இல்லை முஹம்மத் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹுவின் தூதராவார் என்ற திருக்கலிமா மொழியை உச்சரித்து சன்மார்க்க மனித மேதைகளாயினர். அன்று முதல் அதற்கு முந்திய காலத்தை ஜாஹிலிய்யாவென்றும், அதற்குப் பின்னிருந்த காலத்தை இஸ்லாம் என்றும் இந்த வேதம் பிரித்தது. ஜாஹிலிய்யாவின் கருத்து அஞ்ஞானம், பேதைமை, அகங்காரம், வைராக்கியம் எனவும் இஸ்லாமின் கருத்து சாந்தி, தாராளம், அல்லாஹுவுக்கு வழிபடல் என்பவைகளாகும். இதுவே இஸ்லாமிய மத அடிப்படையுமானது.*

*(இலக்கியம் மலரும்)*

---

**பிழை திருத்தம்.**

**சென்ற ஜுன் மாத இதழில் சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் அலி மௌலானா நாயகம் அவர்களின் சிங்கப்பூர் உரையில் ... 47 ஆம் பக்கத்தில்.....**

ஜீலான் நகரிலிருந்து பகுதாது செல்வதற்கு 40 தீனார் கொடுத்து அனுப்பி வைத்தார்கள். அப்போது நாயகம் அவர்கள் சொன்னார்கள். இந்த இல்மை ஹலாலான முறையிலும் கற்றுக்கொள்ள வேண்டும். ஹலால் ஆன ஆகாரத்தைக் கொண்டு அந்த இல்மை நான் பேணிக்கொள்ள வேண்டும். அப்போது தான் அந்த இல்மு பலன் கொடுக்கும் என்று சொல்லி எனக்கு செலவு செய்து படிப்பதற்கு ஏதும் தாருங்களேன் என்று கேட்ட போது, அவர்கள் தாயார் அவர்கள் 40 தீனார் கொடுத்து சென்று வாருங்கள் மகன் என்று சொல்லி நிறைய துஆ செய்து அனுப்பிவைத்தார்கள்.....**என உள்ளது.**

இங்கே இரண்டு இடத்திலும் 40 தீனார் என அச்சிடப்பட்டுவிட்டது. அதனை இரண்டாவது தடவை 40 தீனார் என வருமிடத்தில் 4000 **தீனார்** என திருத்தி வாசிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். *இப்படிக்கு, அசிரியர்*

*சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய் யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்களின் மறைவின்போது தமிழகத்தின் பிரபல நாளிதழ்கள் வெளியிட்ட செய்தி .*

## சங்கைக்குரிய மஹான் மௌலானா அவர்களின் மறைவு

நபிகள் பெருமானார்(ஸல்) அவர்களின் வழித் தோன்றலும், அகில இலங்கை உலமா போர்டு தலைவரும், இலங்கை அரசினர் கல்வி இலாக்கா அரபிப் பகுதி அதிபரும் பன்னூல் ஆசிரியரும் பல மொழி அறிஞரும் தத்துவ மேதையும், பல கல்விக் கூடங்களின், கழகங்களின் ஸ்தாபகரும் ஆத்ம ஞானியுமான அல்லாமா, அல்ஹாஜ், 'ஷெய்குல் இர் பான்' ஹிஸ் ஹோலினஸ் ஜமாலியா ஸைபிது யாசீன் மௌலானா அல்ஹாஷிமீ அவர்கள் நாளது ஹிஜ்ரி 1385 துல்கஃதா பிறை 18 வியாழன் மாலை 6 மணியளவில் இறைவன் நாட்டப்படி இறையடி சேர்ந்தார்கள்.

பிறப்பு-30-12-1899 வலிகாமம் (இலங்கை).

மறைவு-10-3-66. திருமுல்லைவாசல், சீர்காழி தாலுகா. தஞ்சை ஜில்லா தென் இந்தியா.

## மகிழ வேண்டாம்!

*"உங்களுக்கு ஒரு நன்மை ஏற்பட்டால் (அது) அவர்களை வருந்தச் செய்கின்றது. உங்களுக்கு ஒரு தீங்கு ஏற்பட்டாலோ அதற்காக அவர்கள் மகிழ்ச்சி அடைகின்றனர்." (அல்குர் ஆன் : 3 : 120)*

பிறர் துயர் கண்டு மகிழ்வது நயவஞ்சகர் குணம்.

எனவே, மக்களுக்கு நல்லது நடப்பதை விரும்புங்கள்; உங்களுக்கு நடப்பதைப் போல.

அவர்களுக்குத் தீங்கு விளைவதன் மீது வெறுப்புக் கொள்ளுங்கள்; உங்களுக்கே விளைந்தது போல.

ஸிர்ரீ ஸிக்தீ ரஹிமஹுல்லாஹ், தாம் வாழ்ந்த காலத்தின் பேரறிஞர் ஆவார்கள். அவர்கள் கூறினார்கள்: ஒரு முறை அல்ஹம்து லில்லாஹ் – அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் என்று மகிழ்ச்சியுடன் கூறியதற்காக முப்பது ஆண்டுகளாகப் பாவமன்னிப்புக் கோரி வருகிறேன்.

என்ன நடந்தது? என்று கேட்டார்கள்.

பக்தாதில் தீ விபத்து ஏற்பட்டது. என் கடை தப்பியது. நான் வெளியில் வந்தேன்.

அப்போது என்னை ஒருவர் சந்தித்து, உங்கள் கடை தப்பி விட்டதே என்றபோது, அல்ஹம்து லில்லாஹ் என்றேன்.

**மக்களைத் தவிர்த்து, எனக்கு மட்டும் நல்லது நடப்பதை எண்ணத்தில் கொண்ட அந்நேரம் முதல் கை சேதத்தை உணர்ந்து வருகிறேன் என்றார்கள்.**

# சங்கைமிகு இளைய நாயகம் அவர்களின் இந்திய விஜயம்.

சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள் சென்னை பொறியாளர் ஹைதர் நிஜாம் ஹக்கிய்யுல் காதிரி அவர்களின் இல்லத் திருமண விழாவில் கலந்து சிறப்பிக்குமுகமாக 22.6.2024 சனிக்கிழமை மதியம் குடும்பத்தாருடன் சென்னை வந்தார்கள். மறுநாள் ஞாயிறு அன்று நடந்த திருமணவிழாவில் கலந்து மணமக்களை ஆசீர்வதித்து துஆ செய்தார்கள்.

24 திங்களன்று சென்னை முரீதுப்பிள்ளைகள் சந்திப்பு நடந்தது. 25 செவ்வாய் காலை திருமுல்லைவாசல் சென்று தங்கள் பாட்டனார், சங்கைமிகு குத்புல் ஃபரீத், ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாமிய் நாயகம் அவர்களின் ஜியாரத் முடித்து,அங்கு தங்களின் உறவினர்கள், முரீதுகளையும் சந்தித்து, 26.6.24 புதன் காலை புறப்பட்டு மதுக்கூர் சென்று, பின்னர் சம்பைப்பட்டினம் சென்று அங்கு தங்களின் பூட்டனார் சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸையித் முஹம்மத் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களை ஜியாரத் செய்து இரவு திருச்சி பைத்துல் உரஃபா வந்து தங்கினார்கள்.

27.6.24. வியாழன் அன்று மக்ரிபுக்குப்பின் பைஅத் நடைபெற்றது. 28.6.24. திங்கட்கிழமை காலை சென்னை புறப்பட்டார்கள். மக்ரிபுக்குப்பின் பைஅத் நடைபெற்றது. 29.6.24 சென்னை முரீதுகள் சந்திப்பு நடைபெற்றது. 30.6.24. ஞாயிறு காலை விஜயத்தை நிறைவு செய்து இலங்கை புறப்பட்டார்கள். கலீபா. எம். சிராஜுத்தீன் பி.எஸ்.ஸி. ஹக்கிய்யுல் காதிரி, திண்டுக்கல் அப்பாஸ் ஷாஜஹான் பி.எஸ்.ஸி. எம்.பி.ஏ. ஹக்கிய்யுல் காதிரி, எஸ்.ஐ.தவ்லத் ஹக்கிய்யுல் காதிரி, அய்னுல்ஹக் பி.இ. ஹக்கிய்யுல் காதிரி ஆகியோர் உடனிருந்தனர்.

---

மரங்களுக்கு வாடகை தருவதில்லை பறவைகள்

மேய்வதற்கு விலை கொடுப்பதில்லை விலங்குகள்

எந்தக் காட்டுயிரும் நோயென்று மருத்துவ மனையை நாடுவதில்லை

**மனிதனுக்கும் கூட ஐந்தறிவே இருந்திருக்கலாமோ...?**

கவிஞர் அ. காதர் பாட்சா, திண்டுக்கல்.

# முஹர்ரம் 10 ன் முத்தான சிறப்புகள்!

**அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்:**

1. வானங்கள் பூமி படைக்கப்பட்டது.

2. சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் படைக்கப்பட்டது.

3. அர்ஷ் குர்ஸ் படைக்கப்பட்டது.

4. லவ்ஹ் கலம் படைக்கப்பட்டது. ஜிப்ரயீல் மற்ற வானவர்கள் அனைவரும் படைக்கப்பட்டது.

5. ஆதம் – ஹவ்வா அலைஹிமஸ்ஸலாம் படைக்கப்பட்டது.

6. சுவனம் படைக்கப்பட்டது.

7. சுவனத்தில் ஆதம் அலைஹிஸ்ஸலாம் தங்கவைக்கப்பட்டது.

8. இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் பிறந்தது.

9. இப்றாஹீம் நபிக்கு நபித்துவம் வழங்கப்பட்டது.

10. பிர்அவ்ன் கடலில் மூழ்கடிக்கப்பட்டது.

11. ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் (நான்காம் வானுக்கு) உயர்த்தப்பட்டது.

12. இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உயர்த்தப்பட்டது.

13. ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பிறந்தது.

14. ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தவ்பா அங்கீகரிக்கப்பட்டது.

15. நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கப்பல் ஜூத் மலையில் கரையொதுங்கியது.

16. யூஸுப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சிறையிலிருந்து வெளிவந்தது.

17. யூனுஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சமூகத்தாரின் தவ்பா ஏற்றுக் கெள்ளப்பட்டது.

18. ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு உலக ஆட்சி வழங்கப்பட்டது.

19. உலகில் முதன்முதலாக மழை பொழிந்தது.

20. உலக முடிவு நாள் வருவது.

**இவை அனைத்தும் முஹர்ரம் பத்தாம் நாளில் தான்.**

*ஆதார நூல் – தத்கிரா 118. ஸுல்தானுல் வாஇழீன் 302*

# நோயில்லாமல் வாழ ஆறு வழிகள்!

**உணவே மருந்து. உடலே மருத்துவர். கழிவுத் தேக்கம் தான் நோய். கழிவு நீக்கம் சுகம்.**

1. பசி 2. தாகம் 3. உடல் உழைப்பு 4. தூக்கம் 5. ஓய்வு 6. மன அமைதி

**பசி**

உங்கள் உடலுக்கு உணவு தேவையா இல்லையா என்பது சுவரில் தொங்கும் கடிகாரத்திற்குத் தெரியுமா, தெரியாதல்லவா?? பின் ஏன் நேரம் பார்த்து சாப்பிடுகிறீர்கள்?

யாரெல்லாம் நேரம் பார்த்து வேளா வேளைக்கு சரியாக சாப்பிடுகிறாரோ அவர் மிகப்பெரிய நோயாளி ஆகப்போகிறார் என்று அர்த்தம்.

பசியின் அளவு தெரியாமல் அதிகமாக உண்டால், நோய் அளவில்லாமல் வரும் போது, பசியே இல்லாமல் சாப்பிட்டால் என்னவாகும்?

உணவை பசித்து, சுவைத்து, சுவைத்து, கவனித்து, இடையில் தண்ணீர் குடிக்காமல் உண்ண வேண்டும். இதை நீங்கள் சரியாக செய்ததின் மூலம் ஆரோக்கியத்தின் முதல் படியில் காலை வைக்கிறீர்கள்.

**தாகம்**

அனைவருக்கும் பொதுவாக தண்ணீரின் அளவு நிர்ணயிக்கப்படுகிறது, இது தவறு ஏ.ஸி.யில் வேலை பார்க்கும் நபருக்கு 3 லிட்டர் தண்ணீர் தேவைப்படாது. மீறி குடித்தால் சிறுநீரகம் பாதிக்கப்படும்.

வெயிலில் கட்டட வேலை செய்பவருக்கு 3 லிட்டர் போதாது, இவருக்கு அதிகம் தேவைப்படும், இவர் 3 லிட்டர் குடித்தால் சிறுநீரகம் பாதிக்கப்படும்.

சரி, எவ்வளவுதான் குடிப்பது எனக் கேட்கிறீர்களா? ஒரு மனிதர் உண்ணும் உணவு, வாழும் இடம், செய்யும் வேலை இதைப் பொருத்து தண்ணீரின் அளவு மாறுபடும்.

தாகம் எடுக்கும் போது குடியுங்கள், தாகம் தீரும் வரைகுடியுங்கள், மீண்டும் தாகம் எடுத்தால் குடியுங்கள். அளவுகளைப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

தண்ணீரை இயற்கை முறையில் சுத்திகரிக்க, பருத்தித் துணியில் வடித்து மண்பானை, செம்புப் பாத்திரத்தில் ஊற்றிவைத்துக் குடிக்கலாம்.

**உடல் உழைப்பு.**

ஒரு வாகனத்தை 3 மாதம் ஓட்டாமல் வைத்திருந்தால் என்னவாகும்? அதே நிலைதான் உடலுக்கும். குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு 3 மணி நேரமாவது உடல் உழைப்பு அவசியம்.

இதற்கு நீங்கள் முன்னோர்கள் அருளிய யோகப் பயிற்சிகளை செய்யுங்கள், வீட்டு வேலைகளை இயந்திரத்துணையின்றிச் செய்யுங்கள்.

உடலுக்கு வேலை கொடுத்ததின் மூலம் நீங்கள் ஆரோக்கியத்தின் மூன்றாம் படி அடைந்தீர்கள்.

**தூக்கம்**

யாருக்குத் தூக்கம் வரும்? உடலுக்கு வேலை கொடுப்பவருக்கே தூக்கம் வரும். மனதிற்கு மட்டும் வேலை கொடுப்பவருக்கு தூக்கம் வராது. மனதிற்கு மட்டும் வேலை கொடுத்துவிட்டு நீங்கள் தூக்கத்தை எதிர்பார்க்கக் கூடாது.

ஒரு நாள் குனிந்து நிமிர்ந்து உடலுக்கு வேலை கொடுத்துப் பாருங்கள். எப்படி தூக்கம் வருகிறதென்று!

ஒரு மனிதன் உயிர்வாழ உணவு, காற்று, நீர் எவ்வளவு முக்கியமோ அதே அளவு தூக்கமும் முக்கியம்.

இரவு கண் விழித்து வேலை பார்ப்பது உங்கள் உயிருக்கே ஆபத்தாக முடியும்.

பகலில் உறங்கி சமன் செய்துவிடலாம் என நினைக்காதீர்கள். நீங்கள் தலைகீழாக நின்றாலும், கோடி கோடியாய் கொடுத்தாலும் இரவு உறக்கத்தை உங்களால் ஈடு செய்யவேமுடியாது. இரவு தூங்க வேண்டிய சரியான நேரம் 9 மணி.

நீங்கள் 10 மணிக்கு மேல் கண்விழித்திருப்பவராக இருந்தால், மருத்துவச் செலவிற்கு பணம் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள், உங்களுக்கு மிகப்பெரிய நோய் வரப்போகிறது.

இரவு உறக்கம் சரி இல்லை என்றால் கல்லீரல், பித்தப்பை தொடர்பான ஆயிரம் நோய்கள் வரும்.

நீங்கள் இரவு 9 மணிக்கு உறங்கச் சென்றதின் மூலம் ஆரோக்கியத்தின் நான்காம் படியில் கால் அடி எடுத்து வைத்துள்ளீர்கள்.

**ஓய்வு**

சளி, காய்ச்சல், தலைவலி, அசதி போன்ற உடலின் கழிவு நீக்கச் செயலுக்கு நாம் ஓடி ஓடி மருந்து மாத்திரை எடுக்காமல், உடலிற்கு ஓய்வு கொடுக்க வேண்டும்.

சளி, காய்ச்சலுக்கு ஆங்கில மருத்து எடுப்பது தற்கொலை செய்வதற்குச் சமம். உடல் கேட்கும் போது ஓய்வு கொடுத்ததால் நீங்கள் ஆரோக்கியத்தின் ஐந்தாம் படி அடைந்தீர்கள்.

**மன நிம்மதி**

ஐந்து கட்டத்தை வெற்றிகரமாகத் தாண்டி வந்த உங்களுக்கு மன நிம்மதி என்று ஒன்று இல்லை என்றால் பின் கீழ்சறுக்கி பழைய நிலைக்குச் சென்று விடுவீர்கள். மனம் நிம்மதியாக இருக்க விருப்பத்துடன் வேலை செய்யுங்கள், மாதம் ஒரு நாளாவது உங்களுக்குப் பிடித்த சுற்றுலாத் தலங்களுக்குச் சென்று வாருங்கள். நான் பார்க்கும் யாவரும், என்னைப் பார்க்கும் யாவரும் அனைத்து நலமும் வளமும் பெற வேண்டும் என்ற உணர்வெடுங்கள், எனது எண்ணம், சொல், செயல் அனைத்தும் புனிதம் பெற வேண்டும் என்று நினையுங்கள். மனதை நிம்மதியாக வைக்கும் கலைகளைக் கற்றுத் தேர்ந்து ஆறாவது படியில் வீற்றிருக்கும் ஆரோக்கியத்தை அடைந்துவிட்டீர்கள்.

உடலில் சீர் இல்லாத ஒன்று இருக்கிறது; அது சீர்பெற்றால் உடல் முழுவதும் சீர்பெற்றுவிடும். அது சீர்கெட்டால் உடல் முழுவதும் சீர்கெட்டு விடும்.அதுதான் மனம்.

*தகவல்: கலீபா. சக்கரை முஹம்மது ஹக்கிய்யுல் காதிரி.பி.இ. கல்பாக்கம்*

---

## அவ்ன் வாப்பா நாயகமே!

*குருவாய் அமைந்த ஞானி*
*கரையைக் கடக்கும் தோணி*
*திருவாய் மலர்ந்து அருள்வீர்*
*தீன்சுவைப் பாடம் தருவீர்*

*சத்தியம் நிலைக்க வந்தீர்*
*ஞான மார்க்கம் தந்தீர்*
*பத்தியும் தெளிவாய்ப் பெற்றோம்*
*பேதமை களையக் கற்றோம்*

*நித்தமும் உங்கள் பேச்சு*
*நினைவெல்லாம் ஆகிப் போச்சு*
*சுத்தமும் கற்றுக் கொண்டோம்*
*சுகமெலாம் பெற்றுக் கொண்டோம்*

*திக்கினை அறியாக் காட்டில்*
*திசைகளை எமக்குக் காட்டி*
*ஹக்கினை அறிய வைத்தீர்*
*அவ்ன் வாப்பா நாயகமே!*

***கவியன்பன் கலாம்***

# குரு தரிசனம்

**குரு தரிசனம் கேள்வி பதில்.**

1. குரு எல்லாம் குருவா?

எல்லா குருவும் குரு அல்ல, குருமுன் உன் மனம் நின்றாலே அவரே மெய்க்குருவாவர்.

குருவிடம் உன் மனம் பேச வேண்டும், குருவிடம் பணம் பேசக் கூடாது .

2. குருவைத் தேடுபவர் யார்?

குருவைத் தேடுபவர் இறைவனைத் தேடுகிறார்.

குருவைத் தேடுபவர் தன்னைத் தானே அறிகிறார்.

3. குருவின் தகுதியை சோதிப்பவன் யார்?

குருவின் தகுதியை சோதிப்பவன் துடுப்பு இல்லாப் படகோட்டி.

4. குருவைக் கண்டால் என்னவாக உருவாகிறான்?

குருவைக் கண்டவன் உருப்பெறத் தொடங்குகிறான். குருவை ஏற்பவன் குருவின் சீடனாகிறான்.

7. குரு முழுமையானவராக சாட்சி என்ன?

குருவை முழுமையானவராக அறிய, அவர் கூறும் மெய்ஞ்ஞானமே சாட்சி

8. குரு என்பவர் யாருக்காக?

குரு என்பவர் வாழையடி வாழையாக மக்களுக்காக வந்த இறைத்தூதர். இறைத் தூதர்களின் பட்டியல் சங்கையான முஹம்மது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் நிறைவு பெற்றது. அதன் பிறகு ‘‘விலாயத்’’ தொடர்ந்து வரும் உலக முடிவு நாள் வரை.

9. குருவிடம் என்ன கிடைக்கும்?

குருவால் திருவருள் (இறை அருள்) கிட்டும்.

10. குரு என்பவர் யார்?

குரு என்பவர் மெய்ஞ்ஞானத் திறவுகோல், குரு தரிசனம் இதை தரிசனம்.

11. குருத்துவம் என்றால் என்ன?

குருத்துவம் தனித்துவம் ஆனது.

12. குருகடாட்சம் யாரிடம் சேர்க்கும்?

இறைவனிடம் சேர்க்கும்.

13. நல்ல குருவை அறிவது எப்படி?

சுயநலம், ஆடம்பரம், பாரபட்சம் அற்ற எளிமை, இனிமை, தெய்வீகம் ,அமைதி, சாந்தம், நற்பண்பின் வடிவுமானவர்.

14. குருவாக ஆவதற்கு வயது உண்டா?

தெய்வீகத் தெளிவு இருந்தால் போதும்.

15. குருவில் ஆண் பெண் உண்டா?

இறையின் தூதுத்துவத்தை இயம்பும் தூதர்கள் ஆண்கள் மட்டும் தான் (நுபுவ்வத்) ஆனால் (விலாயத்) இரு பாலரும் உள்ளார்கள். தெய்வீக வழியில் நடத்தவும், அறியாமை இருளை மறையச் செய்யவும் - யார் வேண்டுமானாலும் இருக்கலாம்.

16. குருத் தன்மை என்ன?

இறைத்தன்மை நிறைந்தவர்.

17. குருவால் தெய்வீகத்தைக் காட்ட முடியுமா?

முடியும். நீ தகுதி உடையவனாய் இருந்தால்.

18. குருவுக்குத் தகுதி வேண்டுமா?

கடவுளைக் காட்டவேண்டும். உணர முடியாததை உணர்த்தும் போது உணர்ந்து கொள்ள வேண்டும். அதற்கு நீ உணரவும் தகுதி உள்ளவனாக வேண்டும்.

19. குரு ஞானம் எப்படிப்பட்டது?

காலத்தில் உன்னை மீட்பது. காலம் கடந்தும் வாழ்வதும் மறைந்த பின்னும் வாழவைக்க வாழ்வது.

20. குரு ஞானத்தை வெல்ல முடியுமா?

குரு ஞானத்தில் நீ வெற்றியடைந்தால் உன் வெற்றி குருவின் வெற்றியைப் பன்மடங்காக்கும்.

---

மக்களுக்கு ஒரு காலம் வரும். அப்போது ஒரு மனிதர், தாம் சம்பாதித்தது அனுமதிக்கப்பட்ட (ஹலாலான) வழியிலா அனுமதிக்கப்படாத (ஹராமான) வழியிலா என்பதைப் பற்றிப் பொருட்படுத்த மாட்டார் (புகாரீ ஷரீப்-2059)

# சற்குரு சரித்திரம் 4

*(கலீபா. எம். சிராஜுதீன் பி.எஸ்.சி ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி.)*

நமது கண்மணி ஷெய்கு நாயகம் அவர்கள் சிறுபிள்ளையாக இருக்கும்போது நமது அருமை குதுபுல்அக்தாப் யாஸீன் நாயகம் அவர்கள், மனைவி மக்களுடன் இந்தியா வந்திருந்த சமயம் அவர்கள் நமது அப்பா நாயகம் அவர்களின் சம்பைப்பட்டினம் இல்லத்திற்குச் சென்றிருந்தார்கள். அங்கு ஒருநாள் இரவும் தங்கினார்கள்.

வீடு முழுவதும் இங்கொன்றும் அங்கொன்றுமாக பாம்புகள் நெளிந்து கொண்டிருந்தன. நமது அருமை சற்குரு நாயகம் அவர்களின் தாயார், நம் உம்மா உம்முல் முஃமின் அவர்களுக்கு ஒரே பயம். பிள்ளை குட்டி வைத்து இருக்கிறோம். இப்படி பாம்புகள் சர்வ சாதாரணமாக உலா வருதே. இனி ஒரு நிமிடம் இருக்க முடியாது. ஊருக்குப் போக வேண்டுமென்று யாஸீன் வாப்பா நாயகம் அவர்களிடம் கூறிவிட்டார்கள். அதைக் கேட்ட அப்பா நாயகம், பயப்படாதே மகளே! இது எதுவும் செய்யாது! என்று எவ்வளவோ சொல்லியும் அம்மா அவர்களுக்குப் பாம்பு பயம் போகவில்லை. இது போன்று அப்பா நாயகம் வீட்டில் தங்கியிருந்த சமயம அப்பா நாயகம் சட்டை போடாமல் கைலி மட்டும் கட்டிக் கொண்டு அதோ போறாளே பணிப்பெண், அவளைத்தான் கலீல் அவுனுக்கு கல்யாணம் கட்டி வைக்கப்போகிறேன் என்பார்களாம்.

நமது சற்குரு நாயகம் அவர்களுக்குக் கோபம் மேலிட ,அப்பா நாயகம அவர்கள் முதுகில் ஏறி உட்கார்ந்து கொண்டு தமது இரண்டு கைகளினாலும் குத்து.... குத்து... என்று குத்துவார்களாம். அப்பா நாயகம் வயிறு குலுங்க குலுங்க சிரிப்பார்களாம். வீடே ஒரே கலகலப்பாக இருக்குமாம்.

அதனால், பிள்ளைகளை அனுப்ப மனமில்லாமல் அனுப்பிவைத்தார்களாம். நமது அருமை சற்குரு நாயகம் அவர்கள் மழலைப்பருவத்தைத் தாண்டியவுடன் அவர்களின் அருமை தந்தையார் ஜமாலிய்யா செய்யிது யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள் அருமை மகனாருக்கு ஓதச் சொல்லிக்கொடுத்தார்கள். இவர்களுடன் இவர்களின் பெரிய அண்ணன்மார்கள் இருவரும் ஓதவருவார்கள். ஓதும்போது சிறுபிழை ஏற்பட்டுவிட்டாலும் யாஸீன் நாயகம் அவர்களுக்கு கடுங்கோபம் வரும். ஒரே ஏச்சு, பேச்சு, அடி உதைதான்.

இந்த அடிக்கும், ஏச்சுக்கும் பயந்து பெரிய நானாமார்கள் (அண்ணன்மார்கள்) சரிவர ஓத வருவதில்லை. நமது சற்குரு நாயகம் சிறு பிள்ளையாக இருந்ததால் சங்கைக்குரிய வாப்பாவிடம் ஓத வந்துவிடுவார்கள். அப்படி ஓதிக்கொடுத்துக் கொண்டிருக்கும் போது அல்ஹம்து கிதாபில் ஒரு சூராவைச் சொல்லிக் காட்டினார்கள். அதாவது, லி யீலா ஃபி குரைஷின்... என்ற சூரா அது.

இம் சொல்லு.... லியீலாஃபி குறைஷின்... நம் சற்குரு நாயகம் அவர்கள் லிலாஃபி குரைஷின் என்று சொன்னார்கள். திரும்ப ஒழுங்கா சொல்லனும். இம் சொல்... லியீலாஃபி குரைஷின்... திரும்பவும் குழந்தை நாயகம் லிலாஃபி குரைஷின் என்றே சொன்னார்கள். யாஸீன் நாயகத்திற்கு வந்ததே கோபம். அடிக்க கையை ஓங்கினார்கள். குழந்தை சற்குரு நாயகம் அவர்கள் எழுந்து ஓடிவிட்டார்கள். விடவில்லை... இவர்களும் பின்னே துரத்திச் சென்றார்கள். ஓடும் வழியில் கிடந்த உலக்கையையும் தூக்கிக்கொண்டு ஓடினார்கள். வீட்டைச் சுற்றிச் சுற்றி ஓட்டம். அதில் யாஸீன் நாயகம் அவர்களுக்கு பெருவிரலில் ஏதோ பட்டு காயமும் ஏற்பட்டுவிட்டது, இம்.... அப்படியும் விடவில்லை துரத்துவதை. அந்த சமயம் மலக்குமாதிரி வந்த அதிமுக்கியமான ஒரு நபர் மௌலானாங்க.... மௌலானாங்க... என்ன இது? உலக்கையைப் போடுங்கள் என்று அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள். குழந்தை சற்குரு நாயகம் ஓடிச்சென்று அம்மாவைக் கட்டிப்பிடித்துக் கொண்டார்கள். யாஸீன் நாயகம் அவர்களும் மெல்ல மெல்ல கோபம் குறைந்து வாசலில் உள்ள பெட்டகத்தில் உட்கார்ந்துவிட்டார்களா. வந்த நபர் "மௌலானாங்க காலில் அடி பட்டிருக்கிறது. மருந்து போடுங்கள்" என்று கூறிவிட்டுச் சென்று விட்டார். அதற்குப் பிறகு பிள்ளைகள் யாரும் தந்தை யாஸீன் நாயகத்திடம் ஓதவே வருவதில்லை. காலம் உருண்டோடியது. பள்ளியில் தலைசிறந்த மாணவராகப் படித்துக்கொண்டிருந்தார்கள் நம் சற்குரு நாயகம்.

வீட்டிற்கு வரும் முக்கியஸ்தர்களிடம் என் கடைசி மகன் பிற்காலத்தில் சிறந்து விளங்குவார். நன்றாக ஓதுவார் என்று கூறிக்கொண்டிருப்பதை மறைவிலிருந்து நம் சற்குரு நாயகம் அவர்கள் கேட்டார்கள். என்னடா இது.... நம்மைப்பற்றி தந்தை நாயகம் ஊர் மக்களிடம் இப்படிச் சொல்கிறார்கள் என்று தமக்குள்ளே எண்ணியவர்களாக ஒரு முடிவெடுத்தார்கள். சரி இனி தந்தை நாயகம் நம்மை எப்படி அடித்தாலும் சரி அவர்களிடமே எப்படியாவது ஓதி முடித்துவிட வேண்டும் என்ற வைராக்கியம் கொண்டார்கள். திரும்பவும் தந்தை நாயகம் அவர்களிடம் சென்று ஓத ஆரம்பித்தார்கள். தந்தை நாயகம் கட்டிலில் அமர்ந்திருப்பார்கள். இவர்கள் தரையில் மண்டியிட்டு அமர்ந்து ஓதுவார்கள். என்ன ஏச்சு, என்ன பேச்சு... இதற்கிடையில் சிறந்த முறையில் முழுமையாக ஓதி முடித்துவிட்டார்கள்.

ஒரு நாள் நமது அருமை சற்குரு நாயகம் ஒரு தாளில் அரபியில் கவிதை எழுதி அதைத் தயங்கித் தயங்கி நாயகம் அவர்களிடம் காண்பித்தார்கள். அவர்களும் அந்தத் தாளை வாங்கிப்பார்த்தார்கள். மகன் எழுதிய கவிதையைப் படித்தார்கள். மகனாருக்கோ ஒரே பயம், என்ன சொல்வார்களோ? என்று.

தந்தை நாயகம் முகத்தில் மெல்ல சிரிப்பு தென்பட்டதும் அப்பாடா... என்று நம் சற்குரு நாயகம் அவர்களுக்குப் பெருமூச்சு வந்தது. மெல்லச் சிரித்தவாறே வாங்க மகன்... இப்படி கட்டிலில் அமருங்கள் என்று கையால் சைக்கினைக் காட்டினார்கள். நம் சற்குரு மரியாதை நிமித்தம் மறுக்க, இல்லை மகன் இப்படி என் அருகில் அமருங்கள் எனறு அமரவைத்துக் கொண்டார்கள். கவிதை நன்றாக இருக்கிறது மகன் என்று பாராட்டினார்கள். சிறு சிறு தவறு உள்ளது. அதைத் திருத்தியுள்ளேன். அதை மட்டும் திரும்ப வராமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்றார்கள். வசிஷ்டர் வாயாலே பாராட்டுப் பெற்றது போலிருந்தது நம் சற்குரு நாயகம் அவர்களுக்கு.

ஆக, பள்ளிப் படிப்பு முடிவதற்குள் நம் சற்குரு நாயகம் திறம்பட ஒதி முடித்துவிட்டார்கள். ஆயக்கலைகள் அனைத்தையும் தம் அருமைத் தந்தை நாயகம் அவர்களிடமே திருத்தமாக கற்றுக்கொண்டார்கள்.

(தொடரும்)

# கனவு நல்ல கனவு

திருச்சி. கலீபா. எம். சிராஜுத்தீன் அவர்களின் மூத்த மருமகன் **S.B.** ஹாபிஸ் அவர்கள் சென்ற 13.6.2024 அன்று வெள்ளி இரவு ஒரு நல்ல கனவு கண்டார்

அதாவது, திண்டுக்கல் பேகம்பூர், புலவர் தெருவில் உள்ள மர்ஹூம் கலீபா ஷாஹுல் ஹமீது ஹள்ரத் அவர்கள் இல்லம். அதன் திண்ணையில் இருபுறமும் பாய் விரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பக்கத் திண்ணையில் கலீபா. காதிர் முஹம்மது ஆலிம் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் பக்கத்தில் கலீபா சிராஜுத்தீனும், இக்கனவைக் கண்ட ஹாபிஸ் அவர்களும் நிற்கிறார்கள்.

‘திடும்’ என்று நமது அருமை ஷெய்குநாயகம் ஜமாலிய்யா செய்யிது யாஸீன் அலி மௌலானா நாயகம் அவர்கள் காட்சி கொடுக்கிறார்கள் அவர்கள் முகத்தில் முகக்கவசம் (மாஸ்க்) அணிந்திருக்கிறார்கள். அதைக்கண்ட கலீபா காதிர் முஹம்மது ஆலிம் அவர்கள், “வாப்பா முகக்கவசத்தை அகற்றுங்களேன்” என்று கூறுகிறார்கள். உடனே அவர்களும் முகக்கவசத்தை அகற்றி விட்டு, “நான் யார்

தெரியுமா?” நான் முஹிய்யுத்தீன் என்று கூறுகிறார்கள். அந்த சப்தம் பலத்த அசரீரி போன்று கேட்கிறது. பார்க்க முடியவில்லை. ஒரே பிரகாசமாய்த் திகழ்கிறார்கள். கண்கள் கூசும் அளவிற்கு ஒளிப் பிரளயம்தான். இக்காட்சி முடிந்ததும் கனவு தொடர்கிறது.....

திருச்சியில் கலீபா. சிராஜுத்தீன் அவர்கள் இல்லமாகத் தெரிகிறது. அங்கே நடு ஹாலில் நமது அருமை கண்மணி ஷெய்கு நாயகம் கலீல் அவுன் மௌலானா அவர்கள் நின்று கொண்டு இருக்கிறார்கள். அருகில் திண்டுக்கல் கலீபா அப்துல் சலாம் அண்ணன் அவர்கள் நிற்கிறார்கள். ஹாபிஸ் வெளியேயிருந்து வீட்டிற்குள் நுழைகிறார். இவரைக் கண்டதும் ஷெய்கு நாயகம் கூறுகிறார்கள். ஹாபிஸ், நீங்கள் கண்ட கனவை அப்துல் ஸலாம் அவர்களிடம் சொல்லிக் காட்டுங்கள் என்கிறார்கள். உடனே ஹாபிஸ் அவர்கள், தாம் கண்ட கனவைச் சொல்ல, மறைந்த வாப்பா நாயகம் (ரலி) , “என்ன அப்படியா மகன் தன்னைச் சொன்னார்” என்று அகமகிழ்ந்து தங்களது கைகளை ஹாபீஸை நோக்கி நீட்டுகிறார்கள். உடனே ஹாபிஸ் மண்டியிட்டு அவர்களின் இருகைகளையும் பற்றிப் பிடித்து முத்தமிட்டு கண்களில் ஒற்றிக் கொள்கிறார்.

கனவு முடிவுற்றது.

---

## என் குருவே போற்றி...

*பேரருளே...பெரும் பொருளே!*

*இல்லாதிருந்தொன்றாகி*
*நிறைந்திட்ட கருப்பொருளே!*

*அரும் பொருளே...*
*அருவுரு என்றில்லா*
*குருப் பொருளே!*

*அண்ணலே அனைத்துயிரே...*
*காணாக் கரையே!*

*சத்து சித்து ஆனந்தமாம்*
*தனிப் பொருளே..!*

*என் குருவே போற்றி...*
*கலீல் அவுனே போற்றி...!*

கலீபா. அட்வகேட். ஏ.என்.எம். லியாகத் அலி.
பி.எஸ்.ஸி.பி.எல்.ஹக்கிய்யுல் காதிரி.
முதுக்கூர்.

ஃபலஸ்தீன் சோகம்.

# அம்மாவின் தாலாட்டு

கவிஞர். ஈரோடு. தமிழன்பன்

துப்பாக்கி துளைத்த ஆயிரம்
காயங்கள்.

பாலத்தீனத்தில்
நிலாவின் உடம்பிலிருந்து
பிணவாடை கசிகிறது.

இரவுகளில்
குழந்தைகள் கேட்ட கதைகளில்
பாத்திரங்களாய் வந்தவரும்
வந்தவையும் இறந்துவிட்டதால்
கதைகள் கண்ணீரில்
மிதக்கின்றன

எந்தப் பாட்டின் எலும்புகளும்
மிச்சமாகவில்லை.

அம்மாவின் தாலாட்டுகளில்
துப்பாக்கி துளைத்த
ஆயிரம் காயங்கள்
குழந்தைகள் தொண்டைகளில்
கோடைக் கொப்புளங்கள்

அப்பாவின் சிரிப்பால்
அலங்கரிக்கப்பட்ட நாள்கள்
நிகழ்வுகள்
அடித்துச் செல்லப்பட்டன

குருதிவெள்ளத்தில்
கொல்லப்பட்ட அவர்முகத்தைத்
தொட்டுத்தொட்டு
அண்ணன் அழுகிறான் பார்த்து
அக்கா அழுகிறாள்

அதைப்பார்த்துப்பார்த்து
ஊன்றுகோல்மேல்
தன்தாடையைச் சாய்த்துப்
பாட்டி அழுகிறாள்.

பாலத்தீனத்தில்
உடல் நடுங்கியபடி
இரவுகள் அஞ்சி அஞ்சி ஊருக்குள்
நுழைகின்றன.

வெப்பத்தால் வெடித்த பகல்
இறந்தவர்கள் உடம்புமேல்
சவத்துணியாகப் படிந்து
மூடுகிறது.

திடுக்கிட்டு நிற்கும்
வரலாற்றின் பக்கங்களிலிருந்து
விம்மலும் வேதனை முனகலும்
பெருகிவர
இட்லர் முசோலினி ஜார்
மிச்சம் வைத்துப்போன
மதுக்கோப்பைகளோடு
இசுரேலியப் படைவீரர்களின்
வெற்றிக்கூத்து அரங்கேறுகிறது

பாலத்தீனக் கல்லறைக் காட்டில்
காலம்
இன்னும் நான் ஏன்
காலமாகாமல் இருக்கிறேன் என்று
பிசையும் அசைவுகளுக்குள் பிறந்த
வினாவைக் கேட்டுக்கொண்டே
இருக்கிறது.

# வக்ஃபு சொத்துகள்

ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் கண்ணியத்திற்குரிய இஸ்லாமிய மக்களின் சிந்தனைக்கு.

இந்தியாவில் இருக்கும் வக்ஃபு சொத்துக்களை பாதுகாக்க உருவாக்கப்பட்ட வக்ஃபு சட்டத்தை நீக்குவதற்கான முயற்சியை மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி மேற்கொண்டு வருகிறது. வக்பு சட்டத்தை நீக்கக் கோரி பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற மசோதா தாக்கல் செய்யும் முயற்சி நடந்துவருகிறது என்கிற தகவலைக் கூட இஸ்லாமிய சமூகம் இன்னும் அறியாமல் இருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த வக்ஃபு சட்டம் இந்திய மக்களுக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள மிகப்பெரிய பாதுகாப்பு வளையம். இந்த வக்ஃபு சட்டம் ஏன் இந்துத்துவா கொள்கை கொண்ட அரசிற்கு பெரும் வயிற்றெரிச்சலை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை நாம் முதலில் தெரிந்துகொள்வோம். **இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பு இந்தியாவில் ஆட்சி செய்த முகலாயர்கள் மற்றும் அன்று வாழ்ந்த இஸ்லாமிய செல்வந்தர்கள் வருங்கால உம்மத்தின் நலன் கருதி வக்ஃபு செய்த சொத்துக்களின் எண்ணிக்கை என்பது கணக்கில் அடங்காதவை.** அதாவது இந்திய இராணுவம் மற்றும் ரயில்வேவிற்கு அடுத்தபடியாக அதிக சொத்துக்கள் வக்ஃபு சொத்துக்களாக உள்ளது. தற்போது மொத்தம் 8.65.646 அசையா சொத்துக்கள் வக்ஃபு வாரியத்தின் கண்காணிப்பில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

1. அந்தமான் மற்றும் நிக்கோபார் ஐலேண்ட் – 150 அசையா சொத்துக்கள்
2. ஆந்திரபிரதேஷ் – 10708 அசையா சொத்துக்கள்
3. அஸ்ஸாம் – 1616 அசையா சொத்துக்கள்
4. பீகார் (ஷியா) – 1672 அசையா சொத்துக்கள்
5. பீகார் (சன்னி) – 6480 அசையா சொத்துக்கள்
6. சண்டிகர் – 34 அசையா சொத்துக்கள்
7. சத்திஸ்கர் – 2665 அசையா சொத்துக்கள்
8. தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி – 32 அசையா சொத்துக்கள்
9. டில்லி – 1047

10. குஜராத் – 30881 அசையா சொத்துக்கள்

11. ஹரியானா – 23117 அசையா சொத்துக்கள்

12. ஹிமாச்சல் பிரதேஷ் – 4494 அசையா சொத்துக்கள்

13. ஜார்கண்ட் – 435 அசையா சொத்துக்கள்

14. ஜம்மு கஸ்மீர் – 32506 அசையா சொத்துக்கள்

15. கர்னாடகா – 58578 அசையா சொத்துக்கள்

16. கேரளா – 49019 அசையா சொத்துக்கள்

17. லட்சத்தீவு – 896 அசையா சொத்துக்கள்

18. மத்தியபிரதேசம் – 31342 அசையா சொத்துக்கள்

19. மகாராஷ்ட்ரா – 31716 அசையா சொத்துக்கள்

20. மணிப்பூர் – 966 அசையா சொத்துக்கள்

21. மேகாலயா – 58 அசையா சொத்துக்கள்

22. ஒடிசா – 8510 அசையா சொத்துக்கள்

23. புதுச்சேரி – 693 அசையா சொத்துக்கள்

24. பஞ்சாப் – 58608 அசையா சொத்துக்கள்

25. ராஜஸ்தான் 24774 அசையா சொத்துக்கள்

26. தமிழ்நாடு – 60223 அசையா சொத்துக்கள்

27. திரிபுரா – 2643 அசையா சொத்துக்கள்

28. தெலங்கானா – 41567 அசையா சொத்துக்கள்

29. உத்தரபிரதேசம் (சன்னி) – 199701 அசையா சொத்துக்கள்

30. உத்தரபிரதேசம் (ஷியா) – 15006 அசையா சொத்துக்கள்

31. உத்தரகாண்ட் – 5317 அசையா சொத்துக்கள்

இந்த மொத்த சொத்துக்களின் பரப்பளவு என்பது 9.4 இலட்சம் ஏக்கர்

இந்திய ரயில்வேக்கு சொந்தமான மொத்த அசையா சொத்தின் பரப்பளவு 11.5 இலட்சம் ஏக்கர். இந்திய இராணுவத்திற்கு சொந்தமான அசையா சொத்தின் பரப்பளவு 17.78 இலட்சம் ஏக்கர்.

உலகில் 54 இஸ்லாமிய நாடுகள் இருக்கின்றன. எந்த நாட்டிலும் இந்தியாவில் இருக்கும் அளவிற்கு வக்ஃபு சொத்துக்கள் இல்லை. இந்தியாவில் இருக்கும் அளவிற்கு தர்காக்கள், பள்ளிவாசல்கள் மற்றும் மதராசக்களின் எண்ணிக்கை உலகில் எந்த இஸ்லாமிய நாட்டிலும் இல்லை. இதைத் தவிர இன்னும் மீட்கப்படாத ஆக்கிரமிப்பிற்கு உள்ளாக்கப்பட்டு இருக்கும் வக்ஃபு சொத்துக்களின் எண்ணிக்கை ஏராளம். இனாம் நிலங்களாக வக்ஃபு செய்யப்பட்ட அசையா சொத்துக்கள் 100 ஏக்கர் 200 ஏக்கர் என்று தொடங்கி 2000 ஏக்கர் வரை இருக்கின்றது.

தமிழகத்தில் கோவை மாவட்டத்தில் மட்டும் சுமார் 500 ஏக்கர் இனாம் செய்யப்பட்ட வக்ஃபு நிலங்கள் மீட்கப்படாமல அடையாளம் காணப்படாமல் இருக்கிறது. திருச்சி பகுதியில் சுமார் 1000 ஏக்கர் இனாம் நிலங்களும் சங்ககிரி பகுதியில் 300 ஏக்கர் இனாம் நிலங்களும் சத்தியமங்களம் பகுதியில் சுமார் 100 ஏக்கர் இனாம் நிலங்களும் திண்டுக்கல் பகுதியில் 100 ஏக்கர் இனாம் நிலங்களும் நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலம் குன்னூர் பகுதியில் மட்டும் 200 ஏக்கர் வக்ஃபு நிலங்கள் இருக்கின்றன. ஊட்டியில் உள்ள மெயின் பஜார் 80 செண்ட் நிலம் வக்ஃபு நிலம் தனியார் ஆக்ரமிப்பில் உள்ளது. ராம்நாடு திருநெல்வேலி பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் வக்ஃபு நிலங்கள் என மீட்கப்படாத இனாம் வக்ஃபு நிலங்கள் பல ஆயிரம் கோடி மதிப்பில் இருக்கிறது. (இனாம் ஒழிப்பு சட்டத்தை பற்றி தனிப் பதிவு ஒன்றை வெளியிடுகிறேன்). இந்த நிலங்ளை மீட்கவும் இதைப் பற்றி கவலைப்படவும் இந்த வக்ஃபு நிலங்களை மீட்டு இஸ்லாமிய சமூகத்தின் வளர்ச்சிக் பயன்படுத்த வேண்டும் என்கின்ற அடிப்படை சிந்தனை கூட இல்லாமல் இருக்கிறோம்.

1963 ஆம் ஆண்டு இந்த இனாம் நிலங்களுக்கு டைட்டில் டீடு வழங்கப்பட்டது. அந்த ஆவணங்கள் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் இருக்கிறது. (என்னிடம் கோவை மாவட்டத்தைச் சார்ந்த 20 இனாம் நிலங்களுக்கான விபரங்கள் இருக்கின்றன). இந்த வக்ஃபு நிலங்களைப் பாதுகாக்க நமக்கு இருக்கும் மிகப்பெரிய பாதுகாப்பு வக்ஃபு சட்டம் 1995 என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த சட்டம் வக்ஃபு வாரியங்களுக்கு வானுயர்ந்த அதிகாரத்தை வழங்குகிறது.

ஒரு நிலம் வக்ஃபு நிலமா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் வக்ஃபு வாரியத்திற்கு இந்த சட்டம் வழங்குகிறது. ரயில்வே நிர்வாகத்திற்கு இணையாக நிர்வாகக் கட்டமைப்புகளைக் கொண்டு செயல்பட வேண்டிய வக்ஃபு வாரியங்கள் சாதாரண பஞ்சாயத்து அலுவலகங்கள் போல செயல்படுகின்றன என்றால் அதன் முக்கியத்துவம் அறியாமல் வக்ஃபு வாரியங்களை முழுமையாக இஸ்லாமிய சமூகம் பயன்படுத்திக்கெள்ளாமல் இருக்கிறது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஒவ்வெரு வக்ஃபு வாரியத்திற்கும் அந்தந்த மாநில அரசு வருடா வருடம் கோடிக்கணக்கில் மானியம் வழங்குகிறது. தமிழக அரசு தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு வருடம் 2.5 கோடி ரூபாய் மானியம் வழங்குகிறது. இதைத் தவிர வருமானம் வரும் வக்ஃபு நிர்வாகங்களிடம் இருந்து வருமானத்தில் 7 சதவீதத்தை ஈவு தொகையாக வக்ஃபு வாரியம் வசூலிக்கிறது. இந்த இரண்டு தொகையும் சேர்ந்து வக்ஃபு வாரியத்திற்கு வருடத்திற்கு கணிசமான தொகை நிதியாகக் கிடைக்கிறது.

1986 இன் படி வக்ஃபு வாரியம் விதவைகளுக்கு மாதம் மாதம் பராமரிப்புத் தொகை வழங்க வேண்டும், அதன்படி தமிழ்நாடு வக்ஃபு வாரியம் வருடம் 67800 ரூபாய் செலவிடுகிறது. தமிழகம் முழுவதும் நம் இஸ்லாமிய சமூகத்தில வறுமையில் வாடும் விதவைகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு அவர்களுக்கு கண்ணியமாக வாழ தேவையான பராமரிப்புத் தொகையைப் பெற்றுக் கொடுக்க நாம் முயற்சிக்க வேண்டும். பள்ளிவாசல்களில் பிச்சை கேட்டு நிற்கும் அநாதைப் பெண்களுக்கு வழி பிறக்கும்.

உலமாக்களுகவு மாதம் மாதம் ரூபாய் 3000 பென்ஷன் வழங்க பென்ஷன் திட்டம் 1981 இல் உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி 2600 உலமாக்களுக்கு பென்ஷன் வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் 1350 உலமாக்கள் மட்டுமே இது வரை மாத பென்ஷன் தொகை பெற்று வருகிறார்கள். இந்தத் தொகையின் அளவை மாதம் 5000 ரூபாயாக அதிகரிக்க வேண்டும். ஆக்கிரமிப்பில் உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை மீட்டு குடியிருப்பு வீடுகளாக மாற்றியமைத்து குறைந்த வாடகைக்கு ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு வழங்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். இதற்கு வக்ஃபு சட்டத்தையும் வக்ஃபு வாரியங்களையும் பாதுகாக்க வேண்டும்.

அமைப்பு வக்ஃபு நிலங்களை மீட்டெடுக்கவும் அதை நம் உம்மத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தவும் தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இஸ்லாமிய இளம் வழக்கறிஞர்கள் மற்றும் வக்ஃபு நிர்வாகிகளுக்கு வக்ஃபு சம்பந்தமான சட்டப் பயிற்சி அளித்திடவும் வக்ஃபு சொத்துகளை மீட்டெடுக்க வழிகாட்டிடவும் அமைப்பின் சார்பில் திட்டமிடப்பட்டுள்ளது.

உறுப்பினர்களாக தன்னார்வலர்களாக ஒருங்கிணைப்பாளர்காக இந்த அமைப்பில் இணைந்து செயல்பட விருப்பம் உள்ளவர்கள் உங்கள் பெயர் மற்றும் முகவரி உங்களை பற்றிய விபரங்களை 8610496476 என்கின்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பவும். **(சமுதாய நலம் விரும்பி)**

# ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச் சங்கம்

**திருச்சி, தமிழ்நாடு, இந்தியா.**

**நிறுவனர்: சங்கைக்குரிய வாப்பா நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (குத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்கள்.**

**கௌரவ & அவைத் தலைவர்: சங்கைக்குரிய ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்கள்**

---

தலைவர் : கலீபா. ஆலிம் புலவர் **S. ஹுஸைன் முஹம்மது** மன்பஈ, திண்டுக்கல்

செயலாளர் : கிளியனூர் **K.இஸ்மத்**

இணைச் செயலாளர்: அதிரை **S.ஷர்புத்தீன்** Dip.MBM., M.B.A.,

துணைச் செயலாளர்: **ஹிஸாம் ஹிஜாஸ்,** இலங்கை

பொருளாளர் : **K.M.M.A.ஜஉபர் ஸாதிக்** M.C.A., M.B.A., அபுதாபி (மதுக்கூர்)

உறுப்பினர்கள் : கலீபா **A.N.M.லியாகத் அலி** B.Sc., B.L., மதுக்கூர்

கலீபா **M.சிராஜுத்தீன்** B.Sc., திருச்சி.

கலீபா **Dr.S.A.அஷ்ரப் அலி** M.D., D.M., சென்னை

கலீபா முனைவர் **Er.A.P.சஹாப்தீன்** B.E., M.B.A., Ph.D., துபை

கலீபா முனைவர் **Er.M.J.முகம்மது இக்பால்** B.E., M.B.A., F.I.E., Ph.D., துபை

**K.S.அப்பாஸ் ஷாஜஹான்** B.Sc., M.B.A., துபை

**A.நைனார் முஹம்மது அன்சாரி** M.A., MLIS., திருச்சி

**S.H.பஷீர் அஹ்மது** B.A., சென்னை

**S.காஜா நஜ்முத்தீன்,** திண்டுக்கல்.

அட்வகேட் **A.அக்பர் பாஷா** M.A., B.L., மதுரை

**N.A.பசீர் அகமது** B.B.M., M.Com., ஈரோடு (கொச்சின்)

**Er.S.முஹம்மது ஆரிப்** B.E., ஈரோடு

**A.ஷேக் அப்துல்லாஹ்** B.B.A., அதிராம்பட்டினம்

மௌலவி **G.ஷர்புத்தீன்** B.Sc, ஆலிம் யாஸீனிய், பெரம்பலூர்

**Er.A.காஜா முயீனுத்தீன்** B.E., காரைக்கால்

**A.N.M. முஹம்மது யூசுப்** B.Sc., M.A., கத்தார் (மதுக்கூர்)

**M.அப்துல் ஹமீத்** பாக்கவி குவைத் (பாக்கம் கோட்டூர்)

**A.O.A.முஹம்மது அஷ்ரப் அலி,** B.Eng., மலேசியா

**அகமது தஷ்ரீப்,** M.B.A., துபை

**Er.A.அஹ்மத் இம்தாதுல்லாஹ்** B.E., M.B.A., தென்னாப்பிரிக்கா (முதுகுளத்தூர்)

**M.அப்துல் சுபஹான்,** M.C.A., M.Tech., சிங்கப்பூர்

**F. ஸல்மான் பக்கீர் முகைதீன்,** M.Com., இலண்டன்

---

## முத்தமிழ் ஞானி, இறைநேசர், நபி பேரர், **கலீல் அவ்ன் மௌலானா** அவர்களின் இலக்கியப் படைப்புகள் – ஆய்வரங்கு!

தரீகத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யா தரீக்காவின் காமில் ஷைகும், மறைஞானப் பேழையின் நிறுவனருமான முத்தமிழ் ஞானி, இறைநேசர், திருநபிப் பேரர், **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்)** அவர்கள், தங்களின் இலக்கியப் படைப்புகள் மூலம் மெய்ஞ்ஞானம் வளர்த்தவர்கள். தமிழ் மொழிக்கு ஈடில்லாத் தொண்டாற்றிய அவர்களின் **இலக்கியப் படைப்புகள் ஆய்வரங்கு, ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச் சங்கம்** சார்பில், சென்ற **11.05.2024 (சனிக்கிழமை)** இந்திய நேரப்படி மாலை 5 மணியளவில், **இணைய வழியாக** (ஜூம் செயலி) வாயிலாகச் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, கண்மணி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 36 ஆம் தலைமுறைத் திருப்பேரர் **சங்கைக்குரிய ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்கள்** தலைமை தாங்கி அழகிய ஆசியுரை வழங்கினார்கள்.

சங்கைக்குரிய குருபிரான் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்கள் இயற்றிய, **குத்புகள் திலகம் யாஸீன் மௌலானா அல்ஹாஷிமிய் (ரலி) அவர்கள்** என்னும் கவிதைக் காவியம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சியின் தொடக்கமாக, மதுக்கூர் **அல்ஹாஜ். எம். முஹம்மது தாவூது ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் இறைபோற்றல் பாடினார். அடுத்து, மதுக்கூர் **கலீபா. எம். முஸ்தபா ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் நபி போற்றல் பாட, சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழக தரவு அறிவியல் இளங்கலை மாணவர் **ஜனாப். அ. முஹம்மது மாதிஹ் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்துபாடினார்.

ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச் சங்கத் தலைவரும் மறைஞானப் பேழை ஆன்மிக மாதஇதழின் ஆசிரியருமான **கலீபா. ஆலிம் புலவர். எஸ். ஹுஸைன் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பஈ அவர்கள்,** ஆய்வரங்கு குறித்த அறிமுக உரையாற்றினார்கள்.

வாணியம்பாடி இஸ்லாமியா கல்லூரி மேனாள் பேராசிரியர், ராஜ் டி.வி. அகடம்–விகடம் புகழ். **கவிமாமணி, பேராசிரியர் – முனைவர் தி.மு. அப்துல் காதர் அவர்கள்,** குத்புகள் திலகம் யாஸீன் மௌலானா அல்ஹாஷிமிய் (ரலி) அவர்கள் என்னும் கவிதைக் காவிய நூலை நுணுக்கமான முறையில் ஆய்வு செய்து, சிறப்பான உரை நிகழ்த்தினார்கள்.

நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக, சங்கைக்குரிய ஷைகு நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்கள், ஞான வெளிப்பாடாக இயற்றிய **மஹானந்தன் நானே** என்னும் தியானப் பாடல், காணொளி வடிவமாக வெளியிடப்பட்டது. இப்பாடலை, **மறைந்த பிரபல பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம்**அவர்களின் இனிய குரலில் பாடி, இசையமைப்பாளர் **மௌன ராகம் முரளி** அவர்கள் ஒரிஜினல் கம்போஸ் செய்ய, **ஃபஹ்மி ஃபாரூக்கி** அவர்கள் கீபோர்டு & ரிதம் புரோகிராமிங் செய்து கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டிருந்தது. இப்பாடல் இப்பொழுது யூ–டியூப் தளத்தில் வெளியிடப்பட்டு, பார்வையாளர்களின் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்று வருகின்றது.

முன்னதாக, ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் **கிளியனூர் இஸ்மத்** ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் வரவேற்புரையாற்றினார். நிறைவாக, ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச்சங்கத்தின் இணைச் செயலாளர் **அதிரை எஸ்.ஷர்புத்தீன்** ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் நன்றியுரையாற்றினார். இணைய வழியில் நடைபெற்ற இவ்ஆய்வரங்கில், சங்கைமிகு திருக்குடும்பத்தைச் சார்ந்த மௌலானாமார்கள், கண்ணியத்திற்குரிய கலீபாப் பெருமக்கள் உள்பட,

கத்தார், சௌதி அரேபியா, இலண்டன் மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான ஆத்தும சகோதரர்கள் – தமிழ் ஆர்வலர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை திருச்சி **இளங்கவி.அ.நைனார் முஹம்மது அன்சாரி ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் தொகுத்து வழங்கினார்.

முத்தமிழ் ஞானி, இறைநேசர் குருபிரான் கலீல் அவ்ன் நாதர் அவர்களின் இன்னுமொரு இலக்கிய படைப்புடன் அடுத்த ஆய்வரங்கம் விரைவில் நடைபெறும் என்னும் அறிவிப்போடும் அழைப்போடும் ஸலவாத் ஓதி நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

**தகவல்: அ. நை.மு. அன்சாரி, திருச்சி**

---

√ நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்.

√ கண்கள் செய்யும் விபச்சாரம் தவறான பார்வையாகும்.

(புகாரீ ஷரீப்-6243, 6612)

√ மக்களை அதிகமாக சொர்க்கத்தில் நுழையவைக்கும் செயல்கள் எது என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்கப்பட்டபோது. இறையச்சம், மற்றும் நற்குணம் என்று அருளினார்கள்.

மக்களை அதிகமாக நரகத்தில் நுழையவைக்கும் செயல்கள் எது எனக் கேட்கப்பட்டதற்கு, நாவு, மற்றும் மர்மஸ்தானத்தைத் தவறாக உபயோகித்தல் என்று அருளினார்கள். (திர்மிதீ- 2004)

√ மதுபானத்தையும், அதைத் தயார் செய்து கொடுப்பவரையும், (தானே) தயார் செய்து கொள்பவரையும், அதை விற்பவரையும், அதை வாங்குபவரையும். அதைச் சுமந்து செல்பவரையும், யாருக்காக சுமந்து செல்லப்படுகிறதோ அவரையும், அதன் கிரயத்தை உண்பவரையும், அதைப் பருகுபவரையும், பிறருக்குப் பருகக் கொடுப்பவரையும் அல்லாஹ் சபிக்கிறான்.

(அறிவிப்பாளர்- இப்னு உமர் (ரலி) – நூல். இப்னு மாஜா)

---

♦ அப்பா. ஓர் அதிசயமான புத்தகம். கையில் கிடைக்கும்போது அர்த்தம் புரிவதில்லை. அர்த்தம் புரியும் போது புத்தகம் இருப்பதில்லை.

♦ தந்தையிடம் சப்தமாகப் பேசாதீர்கள். முறைத்துப் பார்க்காதீர்கள். திட்டாதீர்கள். சபிக்காதீர்கள். கையேந்த விடாதீர்கள். கண்களில் கோபத்தையும் இதயத்தில் பாசத்தையும் வைக்கும் ஒரே உறவு தந்தை மட்டுமே.

# ஸலவாத்து மழை பொழிவதாக!

*எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்து ஓதுவதே இஸ்லாத்தின் சாரமாக அமைந்துள்ளதை குர்ஆன் – ஹதீஸ் –பெரியார்களின் பொன்மொழிகளிலிருந்து நாம் புரிந்து கொள்ளலாம்.*

*அந்த வகையில் குத்புமார்கள், வலிமார்கள், புலவர்கள், கவிஞர்கள். தங்கள் பாடல்களில் "தாஇமன் அபதா" (காலமெல்லாம்) ஸலவாத்து மழை பொழிவதாக எனப் பாடுவார்கள்.*

*குத்புல் ஃபரீத், ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாமிய் நாயகம் (ரலி)அவர்கள் தங்கள் "கலிமா விருட்சக்ககனிந்த கனி" நூலில் பாட்டனார் மீது எவ்வாறெல்லாம் ஸலவாத்து உண்டாவதாக எனப்புகழ்கிறார்கள் என்பதைக் காண்போம்.*

■ சிறப்புக்கும் மாட்சிமைக்கும் உரியவனான **அல்லாஹ்வின் திக்ரை (நினைவு கூர்கிறதை)க் கொண்டு சந்தோஷ (ஓய்வு பெற)ப்படும் காலமெல்லாம்** முஸ்தபா அவர்களான உன்னுடைய அர்ஷின் ஜோதியின் பேரில் கருணையும் ஈடேற்றமும் புரிவாயாக! அவர்களின் பிச்சளங்களனைவரையும் அதுகொண்டு சேர்ப்பாயாக! அவர்களின் சங்கையான ஸஹாபாக்கள் அவர்களின் பிரதிநிதிகள் பேரிலும் சேர்ப்பாயாக!

■ **அல்லாஹ்வில் நின்றுமுள்ள ஜோதி பிரகாசிக்கிறது கொண்டு அடியார்களின் இதயங்களைப் பிரகாசிக்க வைக்கும் காலமெல்லாம்** நபிகள் நாயகம் அவர்களின் கிளையாருக்கும் இன்னும் அவர்களின் தோழர்களுக்கும் அல்லாஹுவின் அறிவை அறிந்தார்களே அவர்களுக்கும் கருணை உரித்தாகுக.

■ (64) **மேகங்கள் மழைகளைப் பொழிந்து கொண்டிருக்கும் காலமெல்லாம்,** அல்லாஹ்வின் திருக் கருணையான ஸலவாத்து, அழகிய பரிமளிக்கும் ஸலாமுடனே தங்கள் மீது உண்டாகிக் கொண்டிருக்குமாக.

(65) தங்களின் கிளைஞர்கள், தோழர்கள், அனந்தரக்காரர்கள், உருவத்தாலும் கருத்தாலும் மெய்ஞ்ஞானம் கொண்டு தங்களின் பகரங்களாகவிருக்கும் ஆலிம்கள் மீது முண்டாவதாக.

■ (66) **கூடுகளிலே பட்சி இனங்கள் ரீங்காரம் செய்து கொண்டிருக்கும் காலமெல்லாம்.**

(தொடர்ச்சி 42 ஆம் பக்கம் பார்க்க... )

# இமாம் ஷாதுலி நாயகம் (ரலி)

**நம் கையில் வாளும் இருக்கிறது. நம்மோடு நம் நப்ஸும் இருக்கிறது. எப்போது யுத்தம் செய்யப்போகிறோம்?...**

இமாம்-அபுல்-ஹஸன்-ஷாதுலீ நாயகம் அவர்கள் தூனிஸ் தேசத்திற்கு மூன்றாவது முறையாக வருகை புரிந்து நீண்ட நாட்கள் தங்கியிருந்த வேளை. அதுவொரு கோடை காலம்.

ஒரு நாள் இரவு, எம் பெருமானார் நபிகள் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், இமாம் அபுல் ஹஸன் அலீ ஷாதுலீ நாயகம் அர்களின் கனவில் தோன்றினார்கள்.

ய அலீ! லப்பைக் யா ரசூலல்லாஹ்!

எகிப்து தேசத்திற்கு உடனடியாக கிளம்பிச் செல்வீராக! என்ன பணி யா ரசூலல்லாஹ்? நாற்பது சத்திய சீலர்களுக்கு (சித்தீகீன்கள்) நீங்கள் தீட்சை வழங்கி பக்குவம் (துர்பியத்) செய்ய வேண்டும்!

சரி யா ரசூலல்லாஹ்!

வழியில் வெயில் பொசுக்கிடுமே!

கவலையற்க ! மேகம் குடையாக நிழல் தந்து கொண்டே வரும்!

அல்ஹம்து லில்லாஹ். தாகத்திற்கு என் செய்வேன் யா ரசூலல்லாஹ்?

நீங்கள் செல்லும் இடங்களில் முன்னதாக மழை பொழிவிக்கப் பட்டு நீர் நிலைகள் நிரம்பி இருப்பது மட்டுமல்ல, வழி நெடுகிலும் அல்லாஹ்வின் அருள் மழை உங்கள் மீது பொழிவதின் காரணமாக எழுபது அதிசயங்களை (கராமத்துகள்) நீங்கள் வெளிப்படுத்துவீர்கள்! கனவு கலைந்தது.

காலையில் சீடர்களை ஒன்று திரட்டி, பயணத்தை விவரித்தார்கள். மீண்டும் தூனிஸ் வருவது உறுதியில்லை என்றும் சொன்னார்கள். அதைக் கேட்டதும் ஷைக் அவர்களைப் பிரிய மனமில்லாத பெரும்பாலான சீடர்கள் ஊரையும் உறவையும் சொத்துகளையும் சுகங்களையும் துறந்து விட்டு ஷைக் அவர்களுடன் கிளம்பி விட்டார்கள். நபிகள் நவின்றது போலவே வழிநெடுகிலும் நிகழ்ந்தன.

வட ஆப்பிரிக்கா கண்டத்தில் தூனிஸ் தேசத்தில் இருந்து கிழக்கே பயணம் செய்து லிபியா தேசத்தைக் கடந்து எகிப்து தேசத்தை அடைய வேண்டும். கடும்

பாலைவனம். நபிகளின் கட்டளைக்கிணங்க பயணம் மேற்கொண்டதால் நபிகளின் சுபச் செய்திப்படி பயணம் இனிமையாக முடிந்தது. எம் பெருமானார் அவர்கள் கனவில் குறிப்பிட்டது நாற்பது சித்தீகீன்கள். (அல்லாஹ் தஆலா அல்குர்ஆன் வசனம் 4 69 இல் வரிசைப்படுத்தும் போது சித்தீகீன்களை நபிமார்களுக்கு அடுத்ததாக குறிப்பிடுகிறான்

அப்படிப்பட்ட உயர்ந்த நிலையில் இருப்பவர்களுக்கே இமாம் அபுல் ஹஸன் ஷாதுலீ நாயகம் அவர்கள் தர்பியத் செய்திருக்கிறார்கள் என்றால் ஷைக் அவர்களின் உன்னதத்தை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

யா அல்லாஹ்! உனது உன்னதமான நேசர் ஷாதுலீ நாயகம் மற்றும் அவர்களிடம் தர்பியத் பெற்ற நாற்பது சித்தீகீன்களின் பொருட்டினால் எங்கள் அகம், புற பிணிகள் மற்றும் வலிகளைப் போக்கி ஆரோக்கியத்தை வழங்கியருள்வாயாக ஆமீன்.

*-முகைதீன் இப்றாஹீம்-*

---

( 40 ஆம் பக்கத் தொடர்ச்சி)

■ (9) **வானம், பூமி இருக்கும் காலமெல்லாம்** தொடராக சம்பூரண முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்கள் கிளையோர், சகாக்கள் மீதும் ஸலாத்தும் ஸலாமும் சொல்வாயாக.

■ (11) **அவர்கள் மீது, மிக இன்பமான பிரயோசனங்களிலே இதயம் இச்சை கொள்ளும் காலமெல்லாம்** அல்லாஹுதஆலா அவனது ஸலாமுடன் ஸலவாத்தும் சொல்வானாக.

---

🡅 இந்தியப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு முஸ்லிம்கள் வெற்றி பெற்று யாரும் உள்ளே வந்துவிடக் கூடாதென்று கங்கணம் கட்டிக் கொண்டு இந்தியா முழுவதும் பா.ஜ.க. ஒருமுஸ்லிம் வேட்பாளரைக்கூட நிறுத்தல்லை.

ஆனால், இறைவன் சூழ்ச்சிக்காரர்களுக்கெல்லாம் சூழ்ச்சிக்காரன் என்பது அவர்களுக்குத் தெரியாது.

இந்த முறை இந்தியா முழுவதும் 26 முஸ்லிம்கள் வெற்றி பெற்று பாராளுமன்றம் செல்கின்றனர். அல்ஹம்து லில்லாஹ்!

**பானி பூரி – ஓர் எச்சரிக்கை**

🡅 கர்நாடகா உணவுப்பாதுகாப்புத் துறை அதிகாரிகள் நடத்திய ஆய்வில், மக்கள் விரும்பிச் சாப்பிடும் பானிபூரியில் புற்றுநோயை விளைவிக்கும் செயற்கை நிறமிகள் இருப்பதாக அதிர்ச்சித் தகவல்.

# படேசாஹிப் ஹள்ரத் (ரலி)

*(கலீபா. எம். சிராஜுதீன் பி.எஸ்.சி ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி.)*

படே சாஹிப் ஹள்ரத் அவர்கள் சொற்பொழிவு செய்வதே ஒரு தனி ரகம். காவிநிறத்துணியை கஃபன் மாதிரி அணிந்து கொண்டு அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். மக்கள் நடுவில் வழி விட்டு இருபுறமும் அமர்ந்திருப்பார்கள். முதலில் கிராஅத், பின்னர் ஸலவாத்தும் ஓதப்படும். அதன்பின் அவர்கள் நின்று கொண்டும், நடந்து கொண்டும் சொற்பொழிவாற்றுவார்கள்.

பேசும் போது அவர்கள் இடையிடையே தத்துவப் பாடல்வரிகளைக் கூறுவார்கள். அதைக் கூடியிருப்பவர்கள் ஒருபக்கத்தில் இருப்பவர்கள் முதலிலும் மறுபக்கத்தில் உள்ளவர்கள் அடுத்தும் அக்கவிகளைச் சொல்ல வேண்டும்.

அவர்கள் கூறிய கவிகளில் சில..

காதொன்று கேட்கவே கருத்தொன்று நாடவே தொழுகைக்கு இடமில்லை என்று ஹதீஸ் கூறுதே!

ஜோதியிலே நான் வெந்து வெந்து சுகம் பெறுவ தெக்காலம்?

உப்பு பிறப்பதும் நீரிடமாம்

உப்பு உறைவதும் நீரிடமாம்!

ஹக்கனே ஹக்கனே உன்னில் தத்தம்

நடப்பது யாவும் உன் சித்தம்!

வந்ததொருநாள் போவதொரு நாள்

இடையிலிருப்பது சொப்பனமே!

போர்த்த போர்த்த மெத்த மெத்தக் குளிரும்

போர்த்தத் துணியுமில்லை, குளிருமில்லை!

தொண்ணூறு வயதிருந்தாலும் சதமா?

என்றைக்கும் ஒருநாள் சொல்லாமல்

போவது தெரிந்தும் மதமா?

சென்றநாள், சென்ற நாள் சிறுவிரலிட்டு எண்ணலாம்!

பாக்கி நின்றநாள், நின்றநாள் யாருமறியார்!

இவ்வாறு சிறு பாடல் வரிகளைக் கூறிக் கொண்டே மக்களை நோக்கி, ஸலவாத்துச் சொல்லுங்கள் என்பார்கள். அவ்வாறே மக்களும் சொல்வர். பின்னர் அல்லாஹ்வின் திருப்பெயர்களை இரண்டிரண்டாகச் சேர்த்து, யா அல்லாஹ்! யாரஹீம்! என்றோ யாரஹீம்! யாரஹ்மான்! என்றோ கூறுவார்கள். அவ்வாறே மக்களும் கூறுவார்கள்.

ஒரு பக்கத்தில் உள்ளவர்கள் சுப்ஹானல்லாஹ் என்று தஸ்பீஹை ஓதினால் மறுபக்கத்திலுள்ளவர்கள், அல்ஹம்துலில்லாஹ் என்று கூற வேண்டும் கொற்பொழிவாற்றிக் கொண்டு இருக்கும் போதே தண்ணீர் கொண்டு வரச் சொல்லி அதைத் தம் தலையில் ஊற்றிக் கொள்வார்கள்.

இந்தத் திருச்சபைக்கு மலக்குகளும் வருவதால் யாரும் தூங்கி விட வேண்டாம். தூக்கம் வந்தால் உங்கள் தொடையில் கிள்ளிக்கொள்ளுங்கள் என்பார்கள்.

மேலும் வானவர்களுக்கு மிகவும் உகப்பானது திக்ரு, தஸ்பீஹ், ஸலவாத்துகளே யாகும். வானவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள், நீங்கள் எல்லோரும், மரியாதையுடன் எழுந்து நின்று அவற்றை ஓதுங்கள் என்று கூறுவார்கள்.

வேறு சில சமயங்களில் மஹ்பூப் சுப்ஹானி அவர்களின் பார்வை இதோ வந்து கொண்டிருக்கிறது, நீங்கள் எல்லோரும் எழுந்து அமைதியாகவும் மரியாதையாகவும் நில்லுங்கள் என்று கூறுவார்கள்.

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது அளவு கடந்த அன்பு கொண்டிருந்த அவர்கள் தங்களின் பேச்சின் நடுவே,

மக்கா ஹமாரா ஆனாகே ஜானா

மதீனா ஹமாராஹே டிக்கானா

(மக்கா நம் முடையது அது நாம் போகவும் வரவுமான இடமாகும். மதீனா, நாம் நிலையாகத் தங்கி இருக்கும் இடமாகும்) என்று பாடுவார்கள்.

படேசாஹிப் ஹள்ரத் அவர்களின் தாய் மொழி உருது ஆகும். அவர்கள் அடிக்கடி அல்லாஹ்வையும் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் நினைவு கூர்ந்து, யாமுஸ்தபா! யாரசூலல்லாஹ்! யா ஹக்! யாரஸூலல்லாஹ் என்று கூறுவார்கள், தம்முடன் இருப்பவர்களையும் எப்போதும் ஸலவாத்துக் கூறிக் கொண்டே இருக்குமாறு சொல்வார்கள். பெரிதும் துன்பம் ஏற்பட்ட பொழுது யாஹக்! என்று சப்தமிட்டுக் கூறின் இறையருளால் அது நீங்கி விடும் என்றும் அவர்கள் பகர்ந்தார்கள்.

அவர்கள், தண்டையார் பேட்டையில் பணியாற்றும் பொழுது ஆத்மார்த்தக் கழகம் என்ற ஒரு கழகத்தை நிறுவி, அதில் ஞாயிறு தோறும் ஒருவாரம் தமிழிலும் மற்றொரு வாரம் ஆங்கிலத்திலுமாகச் சொற்பொழிவாற்றி வந்தார்கள். அவர்களின் சொற்பொழிவைக் கேட்க எல்லா மதத்தினரும் நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் கலவிமான்களும் வந்து குழுமினார்கள். அவர்கள் கஷ்பு உடையவர்களாக இருந்தார்கள். அதன் காரணமாக அவர்களால் உள்ளங்களை தெளிவாக உணரவும், பின்னால் நடக்க இருப்பதை முன்னால் அறியவும் முடிந்தது. ஒருமுறை, அவர்கள் ஒரு ஜனாஸா ஊர்வலத்தில் கலந்து கொண்டபொழுது அவர்களின் நண்பர் ஒருவர், படேசாஹிப் ஹள்ரத் அவர்கள் சிறந்த ஆன்மிக ஆற்றல் உள்ளவர்களாக இருந்தால், எப்படி ஹள்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறந்தவர்களை எழுப்பினார்களோ அதுபோல் இந்த ஜனாஸாவையும் எழும்பச் செய்யலாமே என்று நினைத்தனார். அதை உள்ளுணர்வால் அறிந்து கொண்ட ஹள்ரத் அவர்கள் நண்பரைப் பார்த்து,....

‘ அடக்கப்பட்டவர்கள் அனைவரையுமே எழுப்ப முடியும்! மக்கள் அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமே! ’ என்று சிரித்துக் கொண்டே கூறினார்கள்.

உண்மையில் அவர்கள் விலாயத் எய்தப் பெற்ற மேதையாக இருந்தார்கள். அன்னாரின் ஷெய்கு ஹைதரபாத் சூபி ஹள்ரத் (நூரிஷா அல்ல) படேசாஹிப் அவர்களை குத்பு என்றும் ஞான மாமேதை என்றும் கூறினர்.

தங்கள் ஷெய்குனா ஹைதரபாத் சூபி ஹள்ரத் அவர்களையும் நன்கு விளங்கி இருந்தார்கள். ஒரு தடவை படேசாஹிப் ஹள்ரத் அவர்கள் தண்டையார் பேட்டையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது, தங்கள் ஷெய்குனா அவர்களுக்குத் தம் இல்லத்தில் விருந்தொன்று நடத்தினார்கள். வீட்டு முகப்பில் ஷெய்குனா நடந்து வருவதற்காக விரிப்பொன்றையும் விரித்து வைத்திருந்தார்கள் படே சாஹிப் ஹள்ரத் அவர்கள்.

ஹைதராபாத் சூபி ஹள்ரத் அவர்கள் வீட்டுக்குள் நுழைந்ததும் அந்த விரிப்பின் மீது நடக்காமல் சற்று விலகி நடந்து வந்தார்கள். இது அவர்களின் தன்னடக்கத்தைக் காட்டுவதே ஒழிய வேறில்லை.

இதைக் கண்ட படேசாஹிப் ஹள்ரத் அவர்கள் பதறிப்போய்... என் நாயகமே! தாங்களை அல்லாஹ் குத்பாகவும், கௌதாகவும் ஆக்கியுள்ளான்! தாங்கள் விரிப்பின்மீதே நடந்து வரலாமே! என்று சப்தமிட்டுக் கூறினார்கள்.

படே சாஹிப் ஹள்ரத் அவர்களின் சில செயல் முறைகளில் ஆலிம்கள் தங்களுக்கே உரித்தான குணத்தால் குறைகண்டார்கள். அதோடு இவர்களிடம்

பைஅத் பெற்றிருந்த ஸர்தார் அப்துல் கறீம் ஹள்ரத் அவர்களையும் சேர்த்துக் கொண்டார்கள்.  இவ்விருவர் மீதும் காஃபிர் பத்வாவும் வழங்கி மகிழ்ந்தார்கள். ஆனால் இதை இருவரும் கண்டு கொள்ளவேயில்லை. வேலையைச் செய்து கொண்டேதான் இருந்தார்கள்.

படேசாஹிப் ஹள்ரத் அவர்கள் பொதக்குடி ஸர்தார் அப்துல் கறீம் ஹள்ரத் அவர்கள் ஆகிய இருவரும் உடன் பிறவா இரட்டையர் போன்றிருந்தனர். அவர்கள் இருவருக்கும் இடையே இருந்த ஆன்மீகத் தொடர்போ அளவிடமுடியாதது. ஹள்ரத் ஷம்ஸுத் தப்ரேஜி (ரலி) அவர்களுக்கும் மௌலானான ரூமி (ரலி) அவர்களுக்கும் இடையே இருந்த நட்புபோன்று அது இருந்தது.

ஒருசமயம் பொதக்குடி மதரஸாவில் படே சாஹிப் ஹள்ரத் அவர்கள் மாணவர்களிடம் உரையாடிக் கொண்டிருக்கும்போது இடையே ஸர்தார் அப்துல் கறீம் ஹள்ரத் அவர்கள்,  இப்படியே உங்களுடன் உரையாடிக்கொண்டிருக்க முடியாது நாங்கள் இருவரும் மக்காவுக்கும் மதீனாவுக்கும் போகக் கூடியவர்களாய் இருக்கிறோம் என்று கூறினார்கள்.

பின்னர், ஸர்தார் ஹள்ரத் அவர்கள் நல்லூரில் உரையாற்றும் போது மக்களே, நாங்கள் இருவரும் உரையாற்றுவதை நன்கு காது கொடுத்துக் கேளுங்கள். அதிக பட்சம் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் நாங்கள் இருவரும் மறைந்து விடுவோம் என்ற முன்னறிவிப்பையும் செய்தார்கள்.

இவ்வாறு ஸர்தார் அப்துல் கறீம் ஹள்ரத் அவர்கள் கூறி, இருபத்து மூன்றாம் நாள், இவர்கள் மறைந்து விட்டார்கள்.

அதற்குப்பின் மஞ்சவி நாயகம் என்ற பத்ருதீன் அஹமது படேசாஹிப் ஹள்ரத் அவர்கள் திண்டுக்கல் வந்திருந்தார்கள்.  அப்போது திருமுல்லைவாசலில் குதுபுல் அக்தாப் ஜமாலிய்யா செய்யிது யாஸீன் மௌலானா (ரலி) அவர்களின் ரவ்ளா ஷரீபுக்கு வலதுபுறம் அடக்கமாகியிருக்கும் சங்கைக்குரிய கலீபா A.P. ஷாஹுல் ஹமீது ஹள்ரத் அவர்களுக்கு திருமணமான நேரம் அது.

சங்கைக்குரிய A.P.S. ஹள்ரத் அவர்களின் துணைவியார் பெயர் உம்மா ஹலிமா என்பதாகும்.  இத்தம்பதியருக்கு ஆரம்பத்தில் குழந்தை இல்லை.

குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆசையில் A.P.S. ஹள்ரத் அவர்களுக்குத் தெரியாமல் சில பெண்களுடன் சேர்ந்து ஸாஹிபுல் வக்த் மஞ்சவி நாயகம் (ரலி) அர்களைக் காணச் சென்று விட்டார்கள் உம்மா ஹலிமா அவர்கள்.

மஞ்சவி நாயகம் அவர்களிடம் பிள்ளை பாக்கியத்திற்கு துஆ செய்யும்படி வேண்டிக் கொண்டார்கள். அதன்படி மஞ்சவி நாயகம் அவர்களும் ஒரு எலுமிச்சைப் பழத்தை எடுத்து ஓதிக் கொடுத்து, இதில் பாதியை நீங்களும் மீதம் உள்ள பாதியை உங்கள் சாஹிபும் (கணவரும்) பிழிந்து குடித்து விடுங்கள், உங்களுக்கு அழகிய ஆண் குழந்தை பிறக்கும். அதற்கு என் பெயரான பத்ருதீன் என்ற திருநாமத்தைச் சூட்டி மகிழுங்கள். அப்படி அக்குழந்தை பிறக்கும் போது நான் உயிருடன் இருக்க மாட்டேன் என்ற பஷாரத்தும் செய்தார்கள். இந்தச் செய்தியை கணவரிடம் சொல்ல பயந்த உம்மா ஹலிமா, ஓதித்தந்த எலுமிச்சை பழத்தை அப்படியே பீரோ டிராயரில் போட்டுவைத்து விட்டார்கள். நாளடைவில் செய்தி கணவருக்குத் தெரிந்துவிட்டது மனைவியைக் கூப்பிட்டு விசாரித்தார்கள். கடும் கோபம் கணவர் முகத்தில் தெரியவே உம்மா ஹலிமா நடந்ததை கணவரிடம் கூறிவிட்டார்கள். எடுத்துவா அந்தப் பழத்தை என்றார் கணவர். மனைவியும் பழத்தை எடுத்துவர, அந்தப்பழம் அன்று பறித்த பழம் போன்று தள தள என்று இருந்தது. எத்தனை நாட்களுக்கு முன் அவர்களைப் பார்க்கச் சென்றாய் என்றார் கணவர். அதற்கு மனைவியார் பத்து பதினைந்து நாட்களிருக்கும் என்றார். என்ன இவ்வளவு நாளா? என்ன புதினம்? பழம் வாடாமல் அப்படியே இருக்கின்றதே! என்று கணவர் வியந்து, ஆம்! ஓதித்தந்தவர் நிச்சயம் ஒரு மஹானாகத்தான் இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு பழத்தை அவர்கள் சொன்னதுபோல் வெட்டி சாறு பிழிந்து வா என்றார் கணவர், மனைவியாரும் அப்படியே செய்ய இருவரும் சாற்றைக் குடித்து விட்டார்கள். மஞ்சவி நாயகம் (ரலி) அவர்கள் திருவாக்குப்படி ஹள்ரத் அவர்களுக்கு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு மஞ்சவிநாயகம் (ரலி) அவர்களின் திருப்பெயரையே சூட்டி மகிழ்ந்தார்கள் அக்குழந்தைதான் பிற்காலத்தில் டாக்டர் பதுருத்தீன் ஆனது. அந்த டாக்டருக்கு என் மூத்த சகோதரியை மணம் முடித்துக் கொடுத்தோம். அதனால் டாக்டர் அவர்கள் எனக்கு மச்சான் ஆனார்கள். **A.P.S.** ஷாஹுல் ஹமீது ஹள்ரத் அவர்கள் **A.P.S.** மாமா முறையானார்கள். மேற்சொன்ன **A.P.S.** மாமா சம்பவம் அவர்கள் மஹத்துவம் மிக்க குத்புல் அக்தாப் ஜமாலிய்யா செய்யிது யாஸீன் மௌலானா (ரலி) அவர்களை சந்திப்பதற்கு முன் நடந்தது ஆகும்.

காலங்கள் ஓடின. ஸர்தார் அப்துல் கரீம் ஹள்ரத் அவர்கள் சொன்னது போல் ஸர்தார் அவர்கள் மறைந்து இரண்டு ஆண்டுகளுக்குள் மஞ்சவி நாயகம் என்ற மஹா தீபம் அணைந்து விட்டது. ஆம்! கிபி 1928 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8ஆம் தேதி இவர்களின் ஜனாஸா தொழுகையில் இவர்களின் ஷெய்கு ஸஹதரபாத் சூபி ஹள்ரத் அவர்களும் கலந்து கொண்டார்கள் என்பது சிறப்பு.

அதுசமயம் ஹைதராபாத் சூபி ஹள்ரத் அவர்கள் பேசும் போது, படே சாஹிப் ஹள்ரத் அவர்கள் எவராலும் புரியமுடியாத பெரிய தகுதியைப் பெற்றிருந்தார்கள் என்று கூறினார்கள்.

படே சாஹிப் ஹள்ரத் அவர்கள் மணம் முடித்தது திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி நிறுவனர் ஜமால் முஹம்மது ராவுத்தர் அவர்களின் மகளாரை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. அதோடு கனம் காயிதே மில்லத் அவர்களுக்கு இவர்கள் சகலை என்பதும் இங்கே குறிப்பிட வேண்டும்.

அன்னாரின் புனித உடல் செம்பியம் பள்ளி வாசல் மைய வாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டு அங்கே ஓட்டுக் கொட்டகையும் போடப்பட்டுள்ளது. அவ்விடத்தில்

“ஹுவல் மஞ்சவீ ஸாஹிபுல்வக்த் நாயிபு ரஸூலுல்லாஹ்” (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.)

(மஞ்சக்குப்பத்தைச் சேர்ந்த இவர்கள் குதுபுஸ்ஸமான் ஆவார்கள், அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம். அவர்களின் பிரதிநிதியாவார்கள் என எழுதப்பட்டுள்ளது.

---

• சொர்க்க வாசல்களில் நடுவாசல் (சிறந்த வாசல்) தந்தை ஆவார். எனவே நீ அந்த வாசலை (தந்தையைக் கவனிப்பதன் மூலம்) பாதுகாத்துக் கொள். இல்லையென்றால் (தந்தையைப் புறக்கணிப்பதன் மூலம்) வீணாகிவிடுவாய்.

( முஸ்னத் அஹ்மத் 27551)

• பொறாமை கொண்டவனைப் பொருட்படுத்தாதே. உன்மீது பொறாமைப்ப டுதால் அவன் கொள்ளும் கவலையே அவனுக்குப் போதும். நீ கவலைப் படுவதைவிட அது பெரிது.

• நற்குணம், பணிவு, தயாளம், மன இச்சைகளுக்கு அடிமைப்படாதிருத்தல் ஆகிய பண்புகள் வீரத்தின் அம்சங்களாகும்.

•(சுல்தானுல் ஆரிபீன் அஹ்மது கபீர் ரிபாயி நாயகம் (குத்தஸல்லாஹு ஸிர்ரஹில் அஸீஸ்)

• நம் வாழ்வில் முன்னேற வேண்டுமென்றால் நம்மிடம் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டுபவர்களைப் பாராட்டுங்கள். ஆலோசனை பெறுங்கள். பாராட்டுகளைத் தலையில் தூக்கிச் சுமந்து கொள்ளாதீர்கள். ஒரு நொடி அனுபவித்துவிட்டுக் கடந்துவிடுங்கள்.

# கர்பலாவை நடத்திய யஜீது!

நவீன உலகில் இன்று நடக்கும் அக்கிரமம் அன்றே நடந்தேறியுள்ளது.

ஸஹாபாக்களையும் அவர்களைப் பின் தொடர்ந்தவர்களையம் நல்லவர் களாகவே பார்க்கும் ஒரு முக்கிய மரபு முஸ்லிம்களிடத்தில் இருக்கிறது.

அது வரவேற்கப்பட வேண்டிய ஒரு அம்சம் தான். ஆனால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது ஸஹாபாக்கள் தொடர்பாக முஸ்லிம் கிரந்தத்தில் பதிவாகியுள்ள ஒரு ஹதீஸ் மூலம் ஸஹாபாக்களில் ஒருசிலர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின்னர் பழைய படி அவர்கள் இருந்த நிலைக்கே சென்று விடுவார்கள் என்றும் கூறியிருக்கின்றார்கள்.

எனவே ஸஹாபாக்களைத் தொடர்ந்து வந்த யஸீதைப் பாதுகாக்க வேண்டும் என்பது அவசியம் தானா என மனம் கேட்கிறது.

இந்த அக்கிரமத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அன்றே கூறிவிட்டுச் சென்றார்கள்.

ஹள்ரத் ஆயிஷா (ரழி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர், தங்கள் தோழர்கள் முன்னிலையில் கூறினார்கள்: நான் எனது ஹவ்லுல் கவ்ஸர் தடாகத்தின் அருகில் உங்களில் என்னிடம் வருபவர் யார் என்று எதிர்பார்த்துக் காத்திருப்பேன்.

அல்லாஹ்வின் மீதாணையாக... உங்களில் சிலர் என்னை நெருங்கவிடாமல் தடுக்கப்படுவார்கள். அப்போது நான் இறைவா! இவர்கள் என்னைச் சேர்ந்தவர்கள். என் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறுவேன்.

அதற்கு இறைவன், இவர்கள் உமக்குப்பின் செய்ததை நீர் அறியமாட்டீர்! இவர்கள் தம் குதிகால்கள் மீது தம் பழைய மதத்திற்கு திரும்பிக் கொண்டே இருந்தனர் என்று கூறுவான். (முஸ்லிம் 4600)

யஜீதை இந்த வஹ்ஹாபிகளும், தேவ்பந்திகளும் தாபிஈ என்றும் அவனைத் திட்டக்கூடாது என்றும் கூறுகின்றார்கள். ஆனால் இமாம் அஹமத் அவர்களின் மகனார் இமாம் அஹமதிடம் யஜீதை லஃனத் செய்வதைப்பற்றிய தங்களின் கருத்து என்ன என்று கேட்கும் போது, அல்லாஹ் எவனை சபிக்கின்றானோ, அவனைநான் சபிக்காமல் இருப்பேனா? என்று கேட்டார்கள் (பிதாயா வன்நிஹாயா).

மேலும், ஹழ்ரத் உமர் பின் அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் அவையில் ஒரு மனிதர் யஜீதை அமீருல் மூமினீன் என கூறினார். அதைக் கேட்ட ஹழ்ரத் உமர் அவர்கள், யஜீதைப் போய் அமீருல் மூமினீன் என்கின்றாயே! எனக் கேட்டு 20 கசையடி வழங்கினார்கள் (துஹ்தீப்).

கர்பலா யஜீதுடைய ஆட்சிக்காலத்தில நடை பெற்றாலும் அவன் இதில் நேரிடையாக ஈடுடவில்லை, அதனால் அவனைத் திட்டக்கூடாது என்றும் சிலர் கூறுகின்றார்கள். அவன் ஆட்சியில் நடைபெற்றால் அவன் சம்பந்தமில்லையா? இதே நேரத்தில் ஏதாவது ஒரு நல்ல காரியம் நடந்தால் அது யஜீத் ஆட்சியில் தான் நடைபெற்றது என்று சொந்தம் கொண்டாட வரமாட்டார்களா? (அவன் தான் இந்தச் சம்பவத்தை நடத்தினான் என்பது வேறு விஷயம்) இந்தச் சம்பவத்தால் யஜீத் சந்தோஷித்தான் என்பது தான் அவன் பாடிய "எங்கே என்னுடைய மூதாதையர்கள்? பத்ரில் கொல்லப்பட்டார்களே அவர்கள், அவர்களுக்குப் பகரம் வாங்கி உள்ளேன்" என்று பாடிய கவிதை இன்றும் பாதுகாக்கப்பட்டு அவனுடைய முகத்திரையை கிழித்துக்கொண்டிருக்கின்றதே? பத்ருப்போருக்குப் பகரம் என்ற இவனின் வார்த்தை இவனின் ஈமானையும் கேள்விக் குறி ஆக்கிக் கொண்டிருக்கின்றதே? மேலும் ஹள்ரத் இமாம் ஹுஸைன் (ரழி) அவர்களுடைய இரு உதடுகளுக்கு மத்தியில் பிரம்பை வைத்து "இது தான் எனக்கும் ஹுஸைனுக்கும் மத்தியில் உள்ள தரஜா" என்று கூறினானே இதை எல்லாம் என்னவென்பது? யஜீதைத் திட்டக்கூடாது, அவர் தாபிஈ என்பவர்கள் என்ன பதில்சொல்ல முடியும்?

நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களைப் பற்றி பல விஷயங்களைக் கூறி உள்ளார்கள்.

சுவனத்து இளைஞர்களின் தலைவர், மணம் தரும் நறுமலர்,

ஹுஸைன் என்னிலிருந்தும் நான் ஹுஸைன்யிலிருந்தும் இருக்கின்றோம்.

ஹுஸைனை யார் நேசிப்பாரோ அவரை அல்லாஹ் நேசிப்பான்.

யார் என்னையும், இந்த இருவரையும், இவர்களின் தந்தை, மற்றும் தாயையும் நேசிப்பரோ அவரும் நானும் சுவனத்தில் ஒரே இடத்தில் இருப்போம். யாஅல்லாஹ் இவர்களை நான் நேசிக்கின்றேன், நீயும் நேசிப்பாயாக, யார் இவர்களை நேசிக்கின்றாரோ அவரை நானும் நேசிக்கின்றேன், நீயும் நேசிப்பாயாக.

எனக்குப் பின்னால் இரண்டை விட்டுச் செல்கின்றேன். அவை பின்பற்றி நடக்கும் காலம் எல்லாம் வழி தவற மாட்டீர்கள். 1. இறைவேதம் 2. எனது குடும்பத்தவர்கள், ஹவுளுள் கவுசரில் என்னிடம் சேர்க்கும் இவை ஒன்றை விட்டு ஒன்று பிரியமாட்டாது.

# இறுதிக் காலம்!

**பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் முன்னறிவிப்புகளில் ஒருசில...**

ஒரு காலம் வரும், இந்த அரபுப் பிரதேசம் செல்வச் செழிப்பாக, சோலையாக மாறும் வரை யுக முடிவுநாள் வராது. (முஸ்லிம் 157)

தகாத காரியங்களில் (விபச்சாரத்தில) ஈடுபட்டால் உங்களுக்கு முன்னர் வாழ்ந்த சமுதாயங்கள் சந்தித்திராத உயிர்க் கொல்லி நோய் வரும். (இப்னுமாஜா)

ஒரு காலம் வரும், மது அருந்துவது அதிகமாகிவிடும். தாறுமாறாக அதிகமாகும். அது இல்லாமல் இருக்கமாட்டார்கள் (புஹாரி 5581, 5231)

என்னுடைய சமுதாயத்தில் மதுவுக்கு மாற்றுப் பெயர் சூட்டி நிச்சயமாக அதனை அருந்துவர். (அபூதாவூத்)

அருகதையற்ற கெட்டவர்கள் தலைமைப் பதவியில் இருப்பார்கள். அநியாயக்கார அரசனை மக்கள் ஏற்றிப் போற்றுவர். (புகாரி)

ஆண்களுக்கு இருக்கும் வெட்க உணர்வு கூட பெண்களுக்கு இருக்காது. பெண்கள் ஆடையணிந்தும் நிர்வாணமாகக் காட்சியளிப்பர். (முஸ்லிம் 3921)

சங்கீத உபகரணங்கள் மிகுதியாகும். இசையில் மயங்கும் மனிதர்கள் பெருகுவார்கள். (திர்மிதி)

காலையில் ஈமானுடனும் மாலையில் குஃப்ருடனும் மக்கள் தீமையில் உழல்வார்கள். (திர்மிதி)

எதற்காக யார் எப்படிச் செய்தார்கள் என்று தெரியாத அளவுக்குக் கொலைகள் அதிகமாகும். (முஸ்லிம்)

முஸ்லிம்கள் உலக சுகங்களுக்காகப் போட்டி போடுவார்கள். (புகாரி)

பூகம்பங்கள் அதிகம் ஏற்படும். (புகாரி)

பூமி அலங்கரிக்கப்படும். (திர்மிதி)

பருவ மழைக்காலம் பொய்க்கும்.

திடீர் மரணங்கள் அதிகரிக்கும், மனித ஆயுள் குறையும்.

முஸ்லிம்கள் பெருகியிருப்பர், ஆனால் கடல் நுரைபோல் இருப்பர்.

பெருமைக்காக பள்ளிவாசல் கட்டுவார்கள். (நஸயீ, அஹ்மது, இப்னுமாஜா)

யுக முடிவு நாளின் நெருக்கத்தில் இட நெருக்கடி ஏற்படும். மக்கள் ஒரே இடத்தில் வந்த குவியும் போது கட்டடங்கள் உயரமாகும்.

வியாபாரமுறைகள் மாறும் . (புகாரி)

பழங்கள் பெரிதாகும். ஒரு மாதுளையை ஒரு கூட்டம் சாப்பிடும். (முஸ்லிம்)

ஒரு தடவை ஒரு மாட்டில் கறக்கும் பால் ஒரு கலத்திற்கே போதுமானதாக இருக்கும். (முஸ்லிம்)

திருக்குர்ஆன் தங்க மையால் அச்சிடப்பட்டிருக்கும். ஆனால் அதனைப் பின்பற்ற மாட்டார்கள். (பைஹகி)

சத்திய விசுவாசிகள் அவமானப்படுத்தப்படுவர்.

(குழப்பம்) கடலலைபோன்று அடுக்கடுக்காய் தோன்றிக் கொண்டிருக்கும். (புகாரி, முஸ்லிம்)

சின்ன சின்ன விஷயங்களில் அலட்சியமாக இருப்பார்கள்.

பேச்சையே (அதிகம் பேசி வியாபாரம் செய்வதையே) பிழைப்பாக்கிக் கொள்வார்கள்.

சந்தைகள் அதிகரித்து அருகாமையில் வந்துவிடும். பொருளாதார வளர்ச்சி அதிகமாகும். (புகாரி 7121,1036,1424)

பொய் மிகைத்து நிற்கும். (திர்மிதி)

அமல்கள் (நன்மைகள்) குறைந்து போய்விடும். மக்களின் உள்ளங்களில் பேராசையின் விளைவாக கஞ்சத்தனம் உருவாக்கப்பட்டு விடும். (புகாரி)

---

இறை நேசர் ஸுப்யான் தவ்ரீ (ரஹ்) அவர்களிடம் ஒருவர், ஜமாஅத் தொழுகையில் முதல் வரிசையில் வலப்பக்கமாக நிற்பது நல்லதா? அல்லது இடப்பக்கமாக நின்று தொழுவது சிறந்ததா? என வினவினார், அதற்கு அவர்கள், நீ உண்ணும் உணவு ஹலாலாகக் கிடைத்ததா? அல்லது ஹராமானதா? என்பதில் கவனம் செலுத்துக! அவ்வாறெனில் வரிசையில் எங்கு தொழுதாலும் பிரச்னை இல்லை. எங்கு தொழவேண்டும் என்பதில் கவனம் செலுத்தும் நீர் அந்த வணக்கம் ஏற்கப்படுவதற்குக் காரணமாக இருக்கும் உணவில் கவனம் செலுத்துக! என்று அறிவுறுத்தினார்கள்.

திருச்சி மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அரபிக் கல்லூரி நடத்திய,

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் 34ஆம் தலைமுறைத் திருப்பேரர்

குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித்

**கலீல் அவ்ன் மௌலானா** அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய்

நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்களின்

## 40 ஆம் நாள் ஃபாத்திஹா – நினைவேந்தல்

## 12 ஆவது யாஸீனிய் ஆலிம் பட்டமளிப்பு விழா! ❸

## முதலாவது ஹாஃபிழ் பட்டமளிப்பு விழா!

---

அழுவோமா தோழர்களே! அவ்ன் நாதர் பிரிவாலே! கண்ணீர் கங்கை ஓடும் கவலை என்று மாறும்? உள்ளம் கொண்ட அன்பாலே உயிரில் தோய்ந்த உறவாலே! என்னும் பாடலுடன், **கலீபா. ஆலிம் புலவர் எஸ். ஹுஸைன் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பஈ அவர்கள்** தமது கீதம் கலந்த சொற்பொழிவை நிறைவு செய்து கொண்டார்கள்.

அடுத்ததாக, மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரியின் நாழிர் ஹள்ரத் **மௌலவி. என். ஸயீது முஹம்மது ஆலிம் மிஸ்பாஹி ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்களின் வாழ்த்துரை :

அளவற்ற அன்பாளனும் நிகரற்ற அருளாளனும் சர்வ வல்லமை பொருந்தியவனுமான அல்லாஹுதஆலாவைப் போற்றிப் பணிந்தவனாக – அவனது தூதர், நமது தலைவர் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களது திருக்குடும்பத்தார் மீதும் உத்தம சத்திய ஸஹாபாக்கள், தாபியீன்கள், தபஅ தாபியீன்கள், இமாம்கள், வலிமார்கள் அனைவர் மீதும் குறிப்பாக, இப்புனிதமான மஜ்லிஸிற்குத் தலைமையேற்றிருக்கின்ற எங்கள் ஷைகு நாயகம் மற்றும் திருக்குடும்பத்தார், கலீபாப் பெருமக்கள், உலமாப் பெருமகள், ஸனது பெறும் மவ்லவிமார்கள், ஏனைய ஆத்தும சகோதர–சகோதரிகள் அனைவருக்கும் ஸலாத்தினை உரித்தாக்கியவனாக இந்த சிறிய உரையைத் தொடங்குகின்றேன்.

கண்ணியத்திற்குரியவர்களே! இன்றைய நிகழ்ச்சி, மூன்று நிகழ்வுகளாக அமைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. அவற்றில் முதலாவது நினைவேந்தல் நிகழ்ச்சி.

ஒருமுறை நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள், உணவருந்திய பின் வழக்கமாக உரையாடும் தருணத்தில், ஒரு முரீதிடம் நீங்கள் குர்ஆன் ஓதிவிட்டீர்களா? என்று கேட்டார்கள். அவாமுன்னாஸ் ஆகிய அந்த முரீது, இல்லைங்க வாப்பா என்று பதிலளித்தார். அதற்கு சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள், என்ன வெட்கக்கேடு? குர்ஆன் ஓதத் தெரியாதவர் சமுதாயத்தில் வெட்கித் தலைகுனிய வேண்டியவர் என்பதாகச் சொன்னார்கள். அதைத் தொடர்ந்து அதே மஜ்லிஸில் இருந்த ஆலிமான மற்றொரு முரீதைப் பார்த்து, நீங்கள் குர்ஆன் ஓதி முடித்து விட்டீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அந்த ஆலிமான முரீது, குர்ஆன் ஓதி முடித்துவிட்டேன் வாப்பா! குர்ஆன் ஓதி முடித்த பிறகு தான் ஸனது வாங்கியிருக்கின்றேன் என்பதாக அவர் சொன்னார். அதற்கு, சங்கைக்குரிய ஷைகு நாயமவர்கள் தங்களுக்கேயுரிய நகைச்சுவை உணர்வு இழையோட, குர்ஆனை எப்படி ஓதி முடிக்க முடியும்? என்று கேட்டார்கள். இது சிந்தனைக்குரிய வார்த்தைகள். இதனைச் சிந்திக்கும்போது நமக்கு அரிய பெரிய கருத்துகள் அவற்றில் பொதிந்திருப்பதை உணர்ந்து கொள்ளலாம்.

குர்ஆன் என்றால் என்னவென்று கிதாபுகளில் தரப்படும் விளக்கங்களைப் பற்றிச் சிந்தித்தாலே நாம் இதனை ஓரளவு விளங்கிக் கொள்ள முடியும்.

குர்ஆனிற்கு கலாமுல்லாஹ் என்று பெயர் குறிக்கப்படுகிறது. அகீதா கிதாபுகளில் இதனை இரண்டு வகையாகப் பிரிப்பார்கள். கலாமே லஃப்லி, கலாமே நஃப்ஸி என்பதாகச் சொல்வார்கள். கலாமே லஃப்லி என்பது, புதிதாக உண்டாகக் கூடியது; அழிவை ஏற்கக்கூடியது. கலாமே நஃப்ஸி என்பது ஆரம்பமும் இல்லாதது, முடிவும் இல்லாதது. ஒரு காகிகத்தில் புதிதாகப் பதிவு செய்யப்படும் ஒன்று, சில காலங்களில் அது மறைந்து போகிறதே, அதுவே கலாமே லஃப்லி என்பார்கள். கலாமே நஃப்ஸி என்பது, இறைவனைச் சுட்டுவதைப் போன்று ஆரம்பமும் இல்லாதது, முடிவும் இல்லாதது. இதை ஏன் சொல்ல வருகின்றேன் என்றால், கலாமே நஃப்ஸி என்றால் என்னவென்பதை நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் அழகான முறையில் நமக்கு விளக்கித் தருகின்றார்கள்.

சூரத்துல் ஃபாத்திஹா. திருக்குர்ஆனில் உள்ள அனைத்து வசனங்களுக்கும் தலைப்புச் செய்தியாக அமைந்திருப்பது, சூரத்துல் ஃபாத்திஹா. திருக்குர்ஆனில் உள்ள 6666 வசனங்களின் சாராம்சத்தை உள்ளடக்கிய ஒரு சூராவாக, இன்னும் சொல்லப்போனால் இரண்டு முறை இறங்கிய மாண்புமிக்க சூராவாக, சூரத்துல் ஃபாத்திஹா அமைந்திருக்கின்றது. அத்தகைய ஃபாத்திஹா சூராவில் அல்லாஹுதஆலா முதலில் எதைச் சொல்கிறான் என்றால், அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன், அர்ரஹ்மா னிர்ரஹீம், மாலிகி யவ்முத்தீன் என்பதுதான்.

மனிதன் திருக்குர்ஆன் ஷரீஃபை முதன்முதலில் எடுத்து ஓதத் தொடங்கும்போது, அவன் முதலில் கற்றுக் கொள்ள வேண்டியது, இறைவன் என்றால் யார்? அந்த இறைவனுக்கும் தனக்கும் என்ன தொடர்பு? என்பதை முதலில் அவன் தெரிந்து கொள்ள வேண்டும். ஆலமீன் என்பதற்கு தஃப்ஸீர் ஜைளாவிலே, **ஆலம் என்றால், எதை வைத்து இறைவன் அறியப்படுவானே அந்த ஒன்றுக்குத் தான் ஆலம் என்று பெயர் என்பதாக விளக்கமளிப் படுகிறது.** அவ்வாறாக, எது இறைவனை அறியக் காரணமாக இருக்கின்றதோ அந்த ஆலத்திற்கு ரப்பாக இருக்கின்ற அல்லாஹுதஆலாவை அறிந்த பின், இய்யாக நஃபுது என்பதாக சூரத்துல் ஃபாத்திஹாவில் ஓதுகிறான். இய்யாக நஃபுது என்றால், இறைவனுடன் உரையாடும் சொற்றொடராகும்.

நாங்கள் தஹ்ஸீல் மாணவராக ஓதிக்கொண்டிருந்த நேரம், எங்கள் உஸ்தாதிடம், இன்டர்நெட்டுக்கும் திருக்குர்ஆனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? இப்போது உலகமெங்கும் பரவியிருக்கின்ற இன்டர்நெட்டைவிட திருக்குர்ஆன் ஷரீஃப் எந்த வகையில் உயர்ந்திருக்கின்றது என்று கேட்டோம். அதற்கு எங்கள் உஸ்தாது சொன்னார்கள்: இன்டர்நெட் என்பது ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் தொடர்பு ஏற்படுத்திப் பேச வைப்பது. ஆனால், திருக்குர்ஆன் ஷரீஃப் மனிதனுக்கும் இறைவனுக்கும் தொடர்பை ஏற்படுத்தி உரையாட வைப்பது என்றார்கள்.

அதன் அடிப்படையில், சூரத்துல் ஃபாத்திஹாவில் வரக்கூடிய இய்யாக நஃபுது என்று ஒரு மனிதன் கூறிவிட்டால், அவன் இறைவனிடம் நேரடியாகப் பேசத் தொடங்கிவிட்டான். இந்த இடத்தில் தான், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள், திருக்குர்ஆன் ஷரீஃபை எப்படி ஓதி முடிக்க முடியும் என்று கேட்டார்களே... அந்தச் சொற்றொடரைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

குர்ஆன் ஷரீஃபை ஓதத் தொடங்கும் மனிதனொருவன், இய்யாக நஃபுது என்பதன் மூலம் இறைவனிடம் பேசத் தொடங்குவான். இறைவனுடனான அந்தப் பேச்சு எவ்வாறு இருக்கும் என்பதாக, திருக்குர்ஆன் ஷரீஃபிலே பல இடங்களிலே அல்லாஹுதஆலா உதாரணங்களுடன் விவரிக்கின்றான்.

நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனிடம் பேசிய வார்த்தைகள், நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனிடம் பேசிய வார்த்தைகள், இன்னும் நபிமார்கள் அனைவரும் இறைவனிடம் பேசிய வார்த்தைகள் எல்லாம் திருக்குர்ஆன் ஷரீஃபில் இடம் பெற்றுள்ளன. மனிதன் இறைவனிடம் பேசத் தொடங்குகின்றான். அதன்பிறகு, இறைவன் மனிதனிடம் பேசுகின்றான். அந்தப்

பேச்சு எங்கே சென்று முடிகின்றது என்று சிந்தித்துப் பார்த்தால், அதுதான் கலாமே நஃப்ஸியாக இருக்கின்றது. அதாவது, ஆதியும் இல்லாத அந்தமும் இல்லாத நிலை ஏற்பட்டு விடுகின்றது. இறைவனுடன் பேசிப் பேசி, ஃபனாவாகி, இறைவன் இவன் மூலமாகப் பேசத் தொடங்கி விடுகின்றான். அந்தப் பேச்சு தான் கலாமே நஃப்ஸி (தமக்குத்தானே பேசிக் கொள்கின்ற பேச்சு) – ஆதியும் அந்தமுமில்லாத பேச்சாக இருக்கின்றது.

எனக்கு முன்பாகப் பேசிய கலீபாப் பெருந்தகை அவர்கள், மிகவும் உணர்ச்சிகரமான பாடலொன்றைப் பாடினார்கள். அதாவது, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் ஜியாரத் செய்யக்கூடிய பாக்கியம் நமக்கு தந்துள்ளார்கள் என்பதாக. நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் உடலையும் தந்து, உயிரையும் தந்து நமக்காக வேண்டி நமது மதுரஸாவில் ஹாழிராகியிருக்கின்றார்கள். நாம் கொடுத்து வைத்தவர்கள். ஏனென்றால், அவர்களின் திருக்குடும்பத்தாரெல்லாம் சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களைத் தியாகம் செய்து நம்மிடத்தே ஒப்படைத்துள்ளார்கள். யார் செய்வார்கள் இந்தத் தியாகத்தை? இதற்காகவே, திருக்குடும்பத்தாருக்கு நாம் காலமெல்லாம் நன்றி பாராட்ட வேண்டும்.

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களை ஜியாரத் செய்கின்றோமே, இந்த ஜியாரத் நமக்கு என்ன பாடம் சொல்லித் தருகின்றது, தெரியுமா? மிஃராஜைப் பற்றிப் பொதுமக்களுக்குப் புரியும்படியாக விளக்கும்போது, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், நான் ஹக்கை நேரடியாகச் சென்று சந்திக்கவில்லை. அதற்கு முன்பாக, பல நபிமார்களின் ஜியாரத்தின் மூலமாக – பல நபிமார்கள் என்னை ஜியாரத் செய்ததன் மூலமாக – அத்தகைய ஜியாரத்தின் மூலமாகத்தான் அந்த ஹக்கை அறிய முடிந்தது என்பதாக, உதாரணமிட்டு விளக்குகின்றார்களே, அதைப் போலவே ஹக்கை அறிகின்ற – அடைகின்ற அழகான வழியை, தங்களது ஜியாரத்தின் மூலம் பெற்றுக் கொள்கின்ற பாக்கியத்தை நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் ஏற்படுத்தித் தந்துள்ளார்கள்.

அவர்களது வம்சத்தில் வந்துதித்த திருப்பேரராகவும் இப்போது நமது சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களாகவும் இருக்கின்ற – அவர்களுடைய முழு அவதாரமாக இருக்கின்ற சங்கைக்குரிய ஷைகு நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல ஹாஷிமிய் நாயகமவர்களின் திருக்கரங்களால் பட்டம் பெற இருக்கின்ற மவ்லவிமார்களை, எனது சார்பாகவும் ஏனைய மதுரஸா உஸ்தாதுமார்கள், நிர்வாகிகள் அனைவரது சார்பாகவும் வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

**நிகழ்ச்சி நெறியாளர், மௌலவி வி.எம்.முஹம்மது ஹஸன் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் :**

நிகழ்ச்சியில் அடுத்ததாக, நம்மை விட்டும் மறைந்துவிட்ட எங்களது உஸ்தாது, மறைக்க முடியாத மாமனிதர், கிபுலா ஹள்ரத் என்று அன்போடு அழைக்கப்படுகின்ற, **மர்ஹூம் தமிழ்மாமணி மௌலவி. என். எஸ்.என். அப்துஸ்ஸலாம் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள்,** நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின்மீது இயற்றிய கஸீதாவை, எகிப்து அல் அஸ்ஹரில் ஓதிப்பட்டம் பெற்ற, **மௌலவி அல்ஹாஃபிழ். ஆதில் குறைஷ் அஸ்ஹரி** அவர்கள் ஓதுவார்கள்.

**குத்புஸ்ஸமானே, ஷம்ஸுல் வுஜூதே, அதைனா பீ தைபா, ஹக்கன் முஜீபா...** என்னும், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களைப் போற்றி, மர்ஹூம் கிபுலா ஹள்ரத் இயற்றிய அழகிய கஸீதாவை இனிமையான குரலில் பரவசமூட்டினார். அதைத் தொடர்ந்து, மௌலவி அல்ஹாஃபிழ். ஆதில் குறைஷ் அஸ்ஹரி அவர்கள், கலீபா ஆலிம் புலவர் அவர்கள் சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள்மீது இயற்றிய **கலீலே கலீலே** பாடலை மலையாள மொழியில் அழகுறப் பாடி மகிழ்வித்தார்.

நிகழ்ச்சியின் அடுத்த நிகழ்வாக, சங்கைக்குரிய ஷைகு நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்களின் மறைவையொட்டி, **மறைஞானப்பேழை நினைவுச் சிறப்பிதழ்,** வெளியிடப்பட்டது. அவ்வமயம், **கலீபா ஆலிம் புலவர் எஸ். ஹுஸைன் முஹம்மது ஆலிம் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் தமது தொகுப்புரையில்,**

இதுவரை ஞானத்திற்கென்று ஒரு பத்திரிகை வெளியிட வேண்டும் என்று யாருமே நினைத்ததில்லை. நமது **சங்கைக்குரிய ஷைகு நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்கள்** தாம் முதன்முதலில் சிந்தித்தார்கள். அதனைச் செய்தும் காட்டியுள்ளார்கள். மறைஞானப் பேழையைப் பொறுத்தவரை,வாப்பா நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்களின் உயர்ந்த குறிக்கோள், மறைஞானப்பேழை தரம் உயர்ந்த தாளில் அச்சிடப்பட வேண்டும். எழுத்துகள் பெரிதாக இருக்க வேண்டும். எழுத்துப் பிழைகள் அறவே இல்லாமல் இருக்க வேண்டும். சங்கைக்குரிய வாப்பா நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்கள், ஆண்டுக்கு ஒருமுறை தான் விஜயம் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால், வராதபோதும் **சங்கைக்குரிய வாப்பா நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்களே வீட்டிற்குள் விஜயம் செய்வது**

**போன்றது தான் இந்த மறைஞானப்பேழை.** அதில் வரக்கூடியது உயிரானது. நமக்கு உயிரானது. மறைஞானப்பேழை ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு மேல், தமிழ் இஸ்லாமியப் பத்திரிகை உலகில் நில்லாமல் தொடர்ந்து வெளிவருவதே ஒரு சாதனையாகும். இதில் விஷேசம் என்னவென்றால், மறைஞானப்பேழை வந்தவுடன் சங்கைக்குரியவாப்பா நாயகம் (குத்தஸல்லாஹு ஸிர்ரஹூல் அழீம்) அவர்கள் வரிவிடாமல் படித்து விடுவார்கள். ஒருவரிகூட விடமாட்டார்கள். அவ்வாறு அவர்களது இதயத்தில் தங்கியிருக்கின்ற மறைஞானப்பேழை அவர்களது நினைவாக வெளியிடப்படுகின்றது.

நமது சங்கைக்குரிய ஷைகு நாயகம் **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்கள்** மறைஞானப்பேழை நினைவுச் சிறப்பிதழின் முதல் பிரதியை வெளியிட, சங்கைக்குரிய வாப்பா நாயகம் (குத்தஸல்லாஹு ஸிர்ரஹூல் அழீம்) அவர்களின் மருகர் சங்கைக்குரிய **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் சாஜித் அலி மௌலானா** அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக் கொள்கின்றார்கள். இரண்டாம் பிரதியை சங்கைக்குரிய **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் வாரிஸ் அலி மௌலானா** அவர்கள் பெற்றுக் கொள்கின்றார்கள். மூன்றாம் பிரதியை சங்கைக்குரிய **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் ஜாஹித் அலி மௌலானா** அவர்கள் பெற்றுக் கொள்கின்றார்கள். அடுத்ததாக, திருமுல்லைவாசல் **சங்கைமிகு ஸய்யித் அலி மௌலானா** அவர்களும், திருமுல்லை வாசல் **சங்கைமிகு ஸய்யித் யாஸீன் மௌலானா** அவர்களும் பிரதிகளைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

அடுத்ததாக, நமது மதுரஸாவின் ஆலோசகராக சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களால் நியமிக்கப்பட்ட நமது மதிப்பிற்கும் மேன்மைக்கும் உரிய **டாக்டர். மௌலவி. ஹாஃபிழ். ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி ஹள்ரத் அவர்கள்** பிரதியைப் பெறுகின்றார்கள்.

அடுத்ததாக, சுன்னத் வல் ஜமாஅத் கொள்கைள் மேலோங்கி இருப்பதற்காக தஞ்சை மாவட்டத்தில் மிகுந்த உழைப்புச் செய்கின்றவர்கள், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் புகாரீ ஷரீஃப் விரிவுரை நூலின் வெளியீட்டு விழாவுக்கு அழைத்தபோது, விரும்பி வந்து, நூலுக்கு அழகானதொரு விரிவுரையாற்றி, என்றென்றும் நமது மனதில் நிலைத்து நிற்கும் தமிழ் மாநில ஜமாஅத்துல் உலமா வின் பொறுப்பிலே இருக்கின்றவர்கள், **ஜி.எம். ஜியாவுத்தீன் ஆலிம் பாகவி** அவர்கள், பிரதியைப் பெறுகின்றார்கள். அடுத்ததாக, நாடெங்கும் உலா வந்து, சொற்பொழிவுகளால் மக்கள் மனதைக் கவர்ந்து வரும், சொல்முரசு **மௌலவி அபூதாஹிர் ஆலிம் பாகவி** அவர்கள் பிரதியைப் பெறுகின்றார்கள்.

அடுத்ததாக, மறைஞானப்பேழை தொடங்கப்பட்டபோது ஆசிரியராக இருந்த ] B Vþ **கலீபா. எம். சிராஜுத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் அடுத்த பிரதியைப் பெறுகின்றார்கள். அடுத்ததாக, மறைஞானப்பேழையின் சிறப்பாசிரியர் **அட்வகேட். ஏ.என்.எம். லியாகத் அலி ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் சார்பாக, பிரதியைப் பெற்றுக் கொள்கின்றார்கள். அடுத்ததாக, **கலீபா. எம். முஹம்மது முஸ்தபா ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் பிரதியைப் பெற்றுக் கொள்கின்றார்கள். அடுத்ததாக, **கலீபா. டாக்டர். எஸ்.ஏ. அஷ்ரப் அலி எம்.டி.டி.எம். ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் பிரதியைப் பெறுகின்றார்கள்.

அடுத்ததாக, ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையின் இந்தியத் தலைவர், மறைஞானப் பேழையின் ஆசிரியர், **கலீபா. ஆலிம் புலவர் எஸ். ஹுஸைன் முஹம்மது ஆலிம் ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பஈ அவர்கள்** பிரதியைப் பெறுகின்றார்கள். அடுத்ததாக, **கலீபா. எம்.ஜே. முஹம்மது இக்பால் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் பிரதியைப்பெற்றுக் கொள்கிறார்கள்.

இவ்வாறாக, கலீபா ஆலிம் புலவர் எஸ். ஹுஸைன் முஹம்மது ஆலிம் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் தொகுத்து வழங்கிட, **மறைஞானப்பேழை நினைவுச் சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்ச்சி** சிறப்பாக நிறைவுற்றது.

அடுத்ததாக, **நிகழ்ச்சி நெறியாளர், மௌலவி வி.எம்.முஹம்மது ஹஸன் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள்** :

இன்று நமது மதுரஸாவில் பட்டம் பெறக்கூடிய ஆலிம்கள் – ஹாஃபிழ்கள் சார்பாக, **அஃப்ழளுல் உலமா. மௌலவி. J. ரஹ்மான் ஷா ஆலிம் யாஸீனிய் D.C.E., (Civil)** அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

**அஃப்ழளுல் உலமா. மௌலவி. J. ரஹ்மான் ஷா ஆலிம் யாஸீனிய் D.C.E., (Civil)** அவர்கள் :

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹூ.

நானும் இன்று பட்டம் பெறக்கூடிய மாணவர்களும் நமது உயிரினும் மேலான குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (குத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்களின் திரு பாக்கியத்தால் பட்டம் பெற இருக்கின்றோம். எங்களுக்கு இத்தகைய உயரிய வாய்ப்பளித்த நமது உயிரினும் மேலான குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (குத்தஸல்லாஹு

ஸிர்ரஹுல் அழீம்) அவர்களுக்கும், அவர்களின் அருமைத் திருப்பேரர் சங்கைக்குரிய ஷைகு நாயகம் நமது உயிரினும் மேலான குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களுக்கும், இன்னும் அவர்களது அஹ்லுல் பைத் என்னும் திருக்குடும்பத்தினருக்கும், மதுரஸா நிர்வாகத்தின ருக்கும், உஸ்தாதுமார்களுக்கும், பேராசிரியர்களுக்கும், இன்று பட்டம் பெறும் மாணவர்கள் அனைவரது சார்பாக, ஜஸாகமுல்லாஹ் கைரன் கஸீரா என்கிற மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றோம். நன்றி. வஸ்ஸலாம்.

(தொடர்ந்து பேசுவார்கள்)

நெகிழ்ச்சித் தொகுப்பு : இளங்கவி.அ. நைனார் முஹம்மது அன்சாரி,M.A., MLIS., ஹ.காதிரிய் திருச்சி

# இதுவன்றோ பிரதியுபகாரம்!

ஒரு முறை ஹஸன் (ரலி) ஹுஸைன் (ரலி) அப்துல்லாஹ் இப்னு ஜஃபர் (ரலி) மூவரும் பிரயாணத்தில் இருந்தபோது உணவு தீர்ந்துவிட்டது. அருகிலிருந்த குடிசைக்குச் சென்று அங்கிருந்த மூதாட்டியிடம் அம்மா! நாங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தினர். எங்களின் கட்டுச்சாதம் தீர்ந்துவிட்டது. அதனால் ஏதேனும் உணவு தர முடியுமா? எனக் கேட்டார்கள். உடனே அந்த மூதாட்டி தம் வீட்டில் இருந்த ஓர் ஆட்டுக் குட்டியை அறுத்து அதனைச் சமைத்து விருந்துபசாரம் செய்தார். அன்று மாலை வீட்டுக்கு வந்த கணவர் நம்மிடமிருந்த ஆட்டுக்குட்டி எங்கே? எனக்கேட்க நடந்த விஷயத்தைக் கூற, நம்மிடமிருந்த ஒரே ஆட்டுக்குட்டியை இப்படிச் செய்துவிட்டாயே எனக் கோபித்துக் கொண்டார்.

சில நாட்களுக்குப்பிறகு இருவரும் ஒரு காரியமாக மதீனா வந்தார்கள். அவர்களை அடையாளம் கண்ட ஹஸன் (ரலி) அவர்கள், அவளுக்குப் பிரதியுபகாரமாக 1000 ஆடுகளும் 1000 தங்கக் காசுகளும் கொடுத்து உபசரித்தார்கள். அப்போது அந்த மூதாட்டி ஓர் ஆட்டை உபகாரம் செய்ததற்கு இவர் நமக்கு எவ்வளவு பிரதியுபகாரம் செய்துள்ளார் பார்த்தீர்களா? என கணவரிடம் இடித்துரைத்தாள். சிறிது நேரத்தில் ஹுஸைன் (ரலி) அவர்கள் அம்மூதாட்டியை அடையாளம் கண்டு 1000 ஆடுகளும் 1000 தங்கக் காசுகளும் கொடுத்து உபசரித்தார்கள். சிறிது நேரத்தில் அப்துல்லாஹ் இப்னு ஜாபிர் (ரலி) அவர்கள் அம்மூதாட்டியை அடையாளம் கண்டு 2000 ஆடுகளும் 2000 தங்கக் காசுகளும் கொடுத்து உபசரித்தார்கள். அப்போது அந்த மூதாட்டி, இன்னார் இருவரும் 1000 தந்தார்கள் நீங்கள் 2000 தருகின்றீர்களே என வினவியபோது, அப்துல்லாஹ் இப்னு ஜாபிர் (ரலி) அவர்கள், ஆம் . அவர்கள் இருவரும் அண்ணலாரின் நேரடிப் பேரர்கள். அவர்களுக்குச் சமமான இறை கூலியைப் பெற வேண்டுமானால் 2000 கொடுப்பதுதானே சரியாகும் என உரைத்தார்கள்.

# ஹிஜ்ரி ஆண்டின் வரலாறு!

இஸ்லாமிய வரலாற்றின் இரண்டாவது கலீஃபா உமர் இப்னு கத்தாப் (ரலி) ஆட்சிக் காலத்தில், ஒரு கடன்பத்திரம் அவர்களின் பார்வைக்கு வந்தது. அதில் மாதம் ஷஅபான் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எழுதியவர்கள் எந்த ஷஅபானைக் குறிப்பிடுகிறார்கள்? கடந்த வருடத்து ஷஅபானா? அடுத்த வருடமா? இப்போதைய ஷஅபானா? முடிவுக்கு வர முடியாமல் யோசித்த உமர் (ரலி) அவர்கள், நமக்கென ஆண்டுகள் ஏன் இல்லை என்ற கேள்வியுடன் சிந்தித்தார்கள்.

முஹாஜிர், அன்சாரி தோழர்களை அழைத்து ஆலோசனை கேட்டார்கள்.

வருடத்தைக் குறிப்பிட மக்களுக்கு ஒரு தொடக்கம் தேவை. என்ன செய்யலாம்? ரோமர்களின் ஆண்டுப்படி போகலாமா? வேண்டாம். அது ரொம்பப் பழையது. அவர்கள் துல்கர்னைன் காலத்திலிருந்து கணக்கிடுகிறார்கள்.

சரி, பாரசீகர்களின் ஆண்டு? வேண்டாம். அதில் நிறையக் குழப்பங்கள். ஒவ்வொரு புதிய மன்னரும் புது ஆண்டை ஆரம்பிக்கிறார்.

யானை ஆண்டு? அப்ரஹாவின் யானைப் படை துவம்சம் செய்யப்பட்டதே, அதிலிருந்து?

அதுவும் நிராகரிக்கப்பட்டது.

ஆலோசனையில் 4 கருத்துகள் முக்கியமாகப் பேசப்பட்டன.

1. நபியவர்களின் பிறப்பு
2. அவர்கள் நபியான வருடம்
3. அவர்களின் ஹிஜ்ரத்
4. மரணம்.

இதில் பிறந்த வருடமும், நபியான வருடமும் சர்ச்சை செய்யப்பட்டன. அதனால் கைவிடப்பட்டன. நபியவர்கள் இறந்த வருடத்திலிருந்து தொடங்கினால் முஸ்லிம்கள் எல்லோரையும் அது கவலையில் தள்ளும். அதையும் கணக்கிட வேண்டாம்.

ஹிஜ்ரத் செய்த வருடமே பொருத்தம் என்று முடிவானது. (பத்ஹுல் பாரீ. பாகம் 7, பக் 268.) இதே கருத்து சஹ்ல் இப்னு சஅது (ரலி) மூலமும் அறிவிக்கப்படுகிறது. (ஸஹீஹுல் புகாரீ 3934)

ஹள்ரத் அலீ (ரலி) அவர்களிடம் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள், நம்முடைய வரலாறு எப்போதிருந்து ஆரம்பிக்கிறது என்று.

ஹள்ரத் அலீ (ரலி) தெளிவாகச் சொன்னார்கள், இணை வைப்பவர்களின் பூமியை விட்டுவிட்டு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் எப்போது வெளியேறினார்களோ அப்போதிருந்து.... அதாவது, ஹிஜ்ரத்திலிருந்து எனக் கூறினார்கள். உமர் (ரலி) தீர்மானமாக அறிவித்தார்கள். மக்காவை விட்டு வெளியேறி மதீனா வந்ததிலிருந்து ஆண்டைத் தொடங்கலாம். அதுதான் ஹிஜ்ரீ ஆண்டுக் கணக்கு.

ஆனால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனா வந்தது ரபீஉல் அவ்வல் மாதம். அப்படியென்றால, அதுதான் முதல் மாதமா? நமது ஆண்டின் முதல் மாதம் எது?

புதிய முடிவு வெளியானது. நபியவர்கள் மதீனா வந்தது ரபீ உல் அவ்வல்தான், ஆனால் ஹிஜ்ரத் செய்யும் யோசனை துல்ஹஜ்ஜில் ஆரம்பமானது. மதீனாவாசிகளின் இரண்டாம் அஃகபா உடன்படிக்கை அப்போதுதான் நடந்தது. அவர்கள் ஹஜ்ஜுக்கு வந்த நேரம் அது. அதற்கு அடுத்த மாதம் முஹர்ரம். மதீனாவாசிகள் தீர்மானமாக வேலையில் இறங்கிய மாதம். ஹிஜ்ரத் திட்டங்கள் ஆரம்பமாயின...

ஆனால், முஹர்ரம் மாதம் ஆண்டின் ஒரு தொடக்கம் மட்டுமல்ல

முஹர்ரம் - ஓர் ஆண்டின் முதல் மாதம் மட்டுமல்ல திட்டவட்டமாக அல்லாஹ்விடம் மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டுதான். பன்னிரண்டு மாதங்களின் வரிசை.

1. முஹர்ரம் 2. ஸஃபர்

3. ரபீஉல் அவ்வல் 4. ரபீஉல் ஆகிர்

5. ஜமாதுல் அவ்வல் 6. ஜமாதுல் ஆகிர்

7. ரஜப் 8. ஷஅபான்

9. ரமலான் 10. ஷவ்வால்

11. துல்கஅதா 12. துல்ஹஜ்ஜு

பிரபஞ்சத்தைப் படைத்தபோதே இத்தனை மாதங்கள்தாம் ஆண்டுக்கு என்று முடிவுசெய்து எழுதியும் வைத்துவிட்டான் அல்லாஹ்.



# மதுரஸா நன்கொடை



**மதுக்கூர்**

1. எ. அமீல் மைதீன் 3மாத சந்தா வாக, குடும்பத்தினரின் நல்வாழ்வுக்கு துவாச் செய்ய ரூ. 600/-ம்,

2. கே.ஓ.பி. முகம்மது பாரூக் பூரண சுகத்துடன் நீண்ட ஆயுளுக்கு துவாச் செய்ய ரூ. 1000/-ம்,

3. மர்ஹூம் ரைஹானா பீவி அவர்களின் நினைவாக, அவர்களின் மறுமை வாழ்வுக்கு துவாச் செய்ய ரூ. 1000/-ம்,

4. முகம்மது கைஃப் நன்றாக படித்து நல்ல மதிப்பெண் பெற துவாச் செய்ய ரூ. 1000/-ம்,

5. பரீதா ரவூப் உண்டியல் சேர்த்த வகையில் அவர்களின் நல்வாழ்வுக்கு துவாச் செய்ய ரூ. 2170/-ம்,

6. ஜபருல்லா பூரண உடல் நலத்துக்கு துவாச் செய்ய ரூ. 1000/-ம்,

7. செய்யது சலீம் மௌலானா அவர்கள் மதுரசா நன்கொடையாக ரூ. 1000/-ம்,

8.நல்ல தம்பி மதரசா பிள்ளைகளுக்காக ரூ. 1000/-ம்,

9. மிப்ரா பிள்ளையின் 40 வது நாளை முன்னிட்டு பிள்ளையின் பூரண சுகத்துக்கும் நீண்ட ஆயுளுக்கும் துவா செய்ய நன்கொடை ரூ. 5000/-ம்,

10. தாஹிர் அகமது வேலை கிடைத்தமைக்கு துவாச் செய்ய மதரசா நன்கொடையாக ரூ. 2000/-ம்,

11. முத்தலீப் பூரணசுகத்துக்கு துவாச் செய்ய மதரசா நன்கொடையாக ரூ. 1000/-ம்,

12. பெயர்சொல்ல விரும்பாதவர் மதரசா ஒரு பிள்ளையின் 1 வருடசெலவு நன்கொடையாககொடுத்ததுள்ள அவர்களின் நல்ல வாழ்வுக்கு துவாச் செய்ய ரூ. 36000/-ம்,

13. எஸ். அகமது பாரூக் - ஆயிசா நம்பதியருக்கு பெண் குழந்தை பிறந்ததை முன்னிட்டு அவர்களின் நல்வழ்வுக்கு துவாச் செய்ய ஒரு ஆடு நேரச்சைக்காக ரூ. 10000/- ம்,

14. எம். பாலிஹா அவர்களின் 3 ஆம் வருட பாத்திஹாவிற்கு துவாச் செய்ய ரூ. 2000/-ம்,

15. முகம்மது கமால் தீன் சபீக் பூரண சுகத்துடன் நீண்ட ஆயுளுக்கு துவாச்செய்ய ரூ. 1000/-ம்,

**திருச்சி**

கான் முஹம்மது நன்கொடை ரூ. 1000/-ம்,

இஞ். காஜா மைதீன் நன்கொடை ரூ. 5000/-ம்,

நைனார் முஹம்மது அன்சாரி நன்கொடை ரூ. 1000/-ம்,

எஸ். ரஹ்மத்துல்லா நன்கொடை ரூ. 1900/-ம்,

மர்ஹூம் ஷாஹுல் ஹமீது நன்கொடை ரூ. 6300/-ம்,

இஞ். காஜா மைதீன் நன்கொடை ரூ. 5000/-ம்,

கான் முஹம்மது நன்கொடை ரூ. 1000/-ம்,

அப்துல் மாலிக் (வைத்தியர் ) நன்கொடை ரூ. 1000/-ம்,

சுல்தான் அப்துல் காதர் (காயல் பட்டினம்) நன்கொடை ரூ. 500/-ம்,

ஏ. ஜின்னா சாஹிப் நன்கொடை ரூ. 1500/-ம்,

டபுள்யூ. ஹுஸைன் அலி நன்கொடை ரூ. 2001/-ம்,

மௌலவி. என்.எஸ்.என். ரபீவுத்தீன் ஆலிம் நன்கொடை ரூ. 1700/-ம்,

**திண்டுக்கல்**

1. பாக்கம் கோட்டூர் – சஹானா பேகம் – முஹம்மது ஆதிக் இவர்களின் பிள்ளை அயானா பெயரில் அகீகா ஆடு ஒன்று கொடுக்க ரூ. 10000/-ம்,

2. திருநெல்வேலி மைமூன் ஜமீன் பரிபூரண சுகத்துடன் நலமுடன் வாழ துஆ செய்ய ரூ. 1000/-ம்,

3. திருநெல்வேலி முஹம்மதலி பரிபூரண சுகத்துடன் நலமுடன் வாழ துஆ செய்ய ரூ. 500/-ம்,

4. திருநெல்வேலி அசாருதீன் பரிபூரண சுகத்துடன் நலமுடன் வாழ துஆ செய்ய ரூ. 500/-ம்,

5. திருநெல்வேலி ஜவஹர் அலி என்ற அசார் பரிபூரண சுகத்துடன் நலமுடன் வாழ துஆ செய்ய ரூ. 500/-ம்

6. திருநெல்வேலி ஷேக் ஹபி 15கிலோ அரிசி வாங்க ரூ. 1000/-ம்,

7. திருநெல்வேலி அபரீத் ஹமீதா விரைவில் திருமணம் நடைபெற துஆ செய்ய ரூ. 500/-ம்,

8. திருநெல்வேலி சுமையாபானு சுகபிரசவம் ஆக நிய்யத் செய்து துஅ செய்ய ரூ. 500/-ம்,

24. பேராவூரணி – ரோஜா பானு – சோதனைகள் – கஷ்டங்கள் அனைத்தும் நீங்கி எவ்வித பிரச்சனை இல்லாமல் இருக்க துஆ செய்ய ரூ. 1000/- மகனுக்கு வேலை கிடைத்து நல்ல சம்பளம் பெற நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 1000/-ம்,

9. சிவகங்கை – அனீஸ் பாத்திமா மற்றும் அப்துல் மாலிக் இவர்களின் குடும்பத்தார் அனைவரும் பரிபூரண சுகத்துடன் நீண்ட அயுளுடன் வாழ துஆ செய்ய ரூ. 2000/–ம்,

10. திருச்சி – திரு விவேக். இவருக்கு நல்ல மணமகள் அமைந்து விரைவில் திருமணம் நடைபெற பிரார்த்தனை செய்ய ரூ. 500/–ம்,

11. மதுரை – K.புதூர் எஸ். சாகுல் ஹமீது துஆ செய்ய மாதாந்திர சதக்கா ரூ. 1000/–ம்,

12. சென்னை எஸ். சர்மிளா உசேன் துஆ செய்ய மாதாந்திர சதக்கா ரூ. 1000/–ம்,

13. பெரம்பலூர் – சர்மிளா பானு **W/o** சத்தார்கான் யாஸீனிய் பித்தப்பை கற்கள் முழுமையாக கரைந்து மறுபடியும் வராமல் பரிபூரண குணமடைய வேண்டி நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 1000/–ம்,

14. முஹம்மது ஹாரிஸ் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரி சதக்கா – ரூ. 600/–ம்

15. காரைக்கால் **R.A.** அப்துல் பாருக் பத்திமா கடன்கள் விரைந்து முடிந்து – குடும்பத்தாரர் அனைவரும் நலமுடன் வழ துஆ செய்ய – மாதாந்திர நன்கொடை ரூ. 500/–ம்,

16. திண்டுக்கல் **M.** நதீர் **S/o** முஹம்மது சதக்கத்துல்லா நிய்யத்படி மாதாந்திர நன்கெடை ரூ. 1000/–ம்,

17. திண்டுக்கல் கிராண்ட் டெய்லர்ஸ் **A.M.** அப்துல் மாலிக் உண்டியல சேமிப்பு காணிக்கை ரூ. 6030/–ம்,.

18. திண்டுக்கல் ஹாஜியா **J.** ராபியா **W/o.** மௌலவி ஹாஜி **K.S.** ஜமால் மைதீன் பாக்கவி சதக்கா ரூ. 5000/–ம்,

19. காந்திகிராமம் – **N.** பத்தூல் & குடும்பம் சதக்கா ரூ. 700/–ம்,

20.மடத்துக்குளம் **S.P.** சேக் அப்துல்லா & சாலிஹா பீவி துஆ செய்ய மாதாந்திர நன்கொடை ரூ. 700/ம்,

21.திண்டுக்கல் மர்ஹூம் அன்வர்தீன் நினைவாக தியானா தஸ்ஹீம் (**PMA** அஷ்ரப்அலி பேத்தி) துஆ செய்ய ரூ. 500/–ம்,

22. மடத்துக்குளம் – சிராஜுத்தீன் துஆ செய்ய ரூ. 500/–ம்,

23. கிளியனூர் = முஹம்மது ஃபஹிம் – ஸ்கின் பிரச்சனை சரியாகி உடல் நல பரிபூரண சுகத்துடன் வாழ துஆ செய்ய ரூ. 500/–ம்,

25. பாக்கம் கோட்டூர் **M.** அப்துல் ஹமீது (குவைத்) நிய்யத் நிறைவேறியதற்காக துஆ செய்ய ரூ. 1000/–ம்,

கும்பகோணம் – மேலக்காவேரி மர்ஹூம் கலீபா **A.M.** அப்துர் ரஷீது ஆலிம் பாக்கவி அவர்களின் பேத்தி **M.** நபிஹா பானுக்கு சிறப்பாக திருமணம் நடைபெற மகிழ்ச்சி மனநிறைவான திருமண வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 2000/–ம்,

26. கீழக்கரை ஆய்ஷத் மாபிதா பிள்ளைகளுக்கு திருமணம் சிறப்பாக நடைபெறவும் பயணம் சென்று நல்லபடியாக வேலை பார்க்க துஆ செய்ய ரூ. 500/

27. மர்ஹூம் முஹம்மது யாக்கூப் அவர்களின் மஃபிரத்திற்க்காக துஆ செய்ய வேண்டி அவரின் குடும்பத்தார் ரூ. 1000/-ம்,

28. திண்டுக்கல் K. நத்தர் ஒலி குடும்பத்தினர் உண்டியல் காணிக்கை ரூ. 781/-ம் உடல் நலம் பரிபூரண சுகத்திற்கு துஆ செய்ய ரூ. 100/-ம் மொத்தம் ரூ. 881/-ம்,

29. வழுத்தூர் H. உவைம் அஹ்மத் உடல் நலம் பரிபூரண சுகத்திற்கு துஆ செய்ய ரூ. 1000/-ம்,

30. மர்ஹூம் எஸ்.பி.ஆரிப் அர்களின் நினைவாக திண்டுக்கல் ரஜியா பேகம் நன்கொடை ரூ.2000/-ம்,

திண்டுக்கல். எம். மாஹிர் 6 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு ஆரோக்கியம், கல்வி, வளத்துட்ன் வாழ துஆ செய்ய நன்கொடை ரூ.500/-ம்,

*வழங்கினர். வழங்கிய வள்ளல்களுக்கு வாப்பா நாயகம் அவர்கள் பொருட்டினால் அல்லாஹ் அவர்களின் நாட்டங்களை நிறைவேற்றுவானாக! அமீன்!*

---

## சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின்
# 6 ஆம் மாத பாத்திஹா

சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாமிய் நாயகம் அவர்களின் 6 ஆறாம் மாத ஃபாத்திஹா 27 . 6. 2024 வியாழன் காலை 11 மணியிலிருந்து 2 வரை திருச்சி தர்ஹா ஷரீபில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

திண்டுக்கல் ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் திண்டுக்கல், மற்றும் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து வந்திருந்த முரீதுகள் கலந்து கொண்டனர். ஸுப்ஹான மௌலிது ஓதி, வாப்பா நாயகம் அவர்கள் இயற்றிய ‘ யா நபிய்யல்லாஹ், பைத்தும் பாடி ஃபாத்திஹா ஓதப்பட்டது. மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ரவ்ழா ஷரீபின் முன்நின்று அனைவரும் ஜியாரத் செய்து மகிழ்ந்தனர்.

சங்கைமிகு வாப்பா நாயகம் அவர்களின் திருக்குடும்பத்தார் சார்பாக ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன அலி மௌலானா அவர்கள் அனவருக்கும் சாக்லெட் தப்ரூக் வழங்கினார்கள்,

அன்று இரவு மக்ரிபுக்குப்பின் வழமையாக ஓதும் ராதிபு கஸீதத்துல் அவ்னிய்யா மஜ்லிஸ் சிறப்பாக நடை பெற்றது.



இளைய நாயகம் அவர்கள் சென்னை ஹைதர் நிஜாம் இல்லத் திருமணத்தில்..



இளைய நாயகம்
அவர்கள் இலங்கைக்கு
வருகை புரிந்த போது
மகிழ்ச்சியுடன்
வரவேற்ற
இலங்கை முரீதுப்
பிள்ளைகள்.

Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2024 - 2026
Date of Publication on 7th, Posted on 10th,
of Every Month at H.P.O. Dindigul





Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road,
Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee